REGISTER No. M. 120.

ओं.

# JNÂNA BODHINI

## A TAMIL MAGAZINE AND REVIEW.

DEVOTED MAINLY TO

LITERATURE, SCIENCE, PHILOSOPHY & RELIGION.

EDITOR:

M. S. PURNALINGAM PILLAI, B.A.

**Vol. VII. No. 7—August 1904.**

CONTENTS.

PAGE.

1. EDITORIAL NOTES.
2. ORIGINAL ARTICLES:—
   1. Hon'ble Mr. Justice C. Sankaran Nair, C.I.E. ........... **K. C. Duraisami.** 243
   2. Antiquity of the Tamils...... **V. Kanakasabhai Pillai, B.A., B.L.** 246
   3. On Hygiene, I... **T. Chelvakesavaroya Mudaliar, M.A.** 249
   4. The Four-Anna Fund of Bengal... **V. Muthukumarasami, B.A.** 253
   5. Kamban's Ramayanam, II........ **Pundit Vencatarama Iyengar** 254
   6. Natural History—I. Lizards...... **V. N. Iyengar, M.A.** 257
   7. Kulasekari—A Drama........ **K. S. Varada Chari, B.A.** 261
   8. On the Twelve Names of Thirumal...... **Pundit Vencatarama Iyengar** 267
3. UTTERANCE OF THE DAY:—.............................. 270
   Hon'ble Mr. Ghokle on "Ranade."
4. PERIODICAL LITERATURE:—............................ 272
   Vemanna's Poems in Tamil Venba—2. Selection of Seeds.
5. DEPARTMENTAL NOTES........................................ 278
   Agricultural, Industrial and Commercial—Medical.
6. ACKNOWLEDGMENT OF BOOKS........................... 280

*Madras:*

THE MADRAS LITERARY BUREAU,
UMPHERSON STREET, B. T.

1904.

Thompson & Co., Printers, Madras.

THE

# Madras Literary Bureau.

**OFFICE:**
**Umpherson Street, Black Town, Madras.**

**PATRONS:**

Diwan Bahadur The Hon'ble Justice Sir S. Subramania Aiyar, K.C.I.E., F.M.U.
Diwan Bahadur P. Rajarathna Mudaliar, C.I.E., F.M.U.
T. Vedadrisadasa Mudaliar, Esq.
*(Retired High Court Judge of Travancore.)*

**Honorary Corresponding Members.**

T. Ramakrishna Pillai, Esq., B.A., F.M.U., F.R.H.S.
G. Subramania Iyer, Esq., B.A.
V. Kanakasabhai Pillai, Esq., B.A., B.L.
J. M. Velu Pillai, Esq., F.M.U.
T. Balasundara Mudaliar, Esq.

**SECRETARY:**
K. C. Duraisami, Esq.

**REPRESENTATIVES:**
Throughout Tamil Districts.

**ORGAN:**
The 'Jnana Bodhini' (ஞானபோதினி).
(A Tamil Monthly Magazine and Review, mainly devoted to literature, Science, Philosophy and Religion).

The '*Madras Literary Bureau*' has the following separate Departments:

1. Printing and Editing.
2. Translation.
3. Newspaper.
4. Contribution.
5. Copying and
6. General Agency.

The '**Bureau**' Edits and Prints Books, &c., for authors and publishers; passes proofs through the press.

The '**Bureau**' purchases Tamil MSS. of Romance, Novel, Fairy Tales and Detective Stories for publication.

The '**Bureau**' undertakes to translate all kinds of works into Tamil.

The '**Bureau**' is quite prepared to take Sale and Sole Agency of Books.

**SOME PRESS NOTICES.**

"Madras, misnamed the Benighted Province, has once again taken the lead in the establishment of an institution, which, supplying a great want in other parts of the civilised world, has singularly enough not been hitherto known in India. We welcome the attempt of our Madras compatriots to start a Literary Bureau in their midst. It is to consist of six separate departments, of which *the Translation and the Contribution Department and the General Agency may be useful even to people in other parts of the land.* We heartily wish the 'Bureau' every success."—*The Citizen, (Allahabad)*, 23rd *May* 1904.

# ஞானபோதினி

"மதராஸ் லிடரரி பூரோ" விலிருந்து வெளிப்படும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VII. } 1904 ம் வஸ் ஜுலை, ஆகஸ்டு மீ } புத்தசம் 7.

உள்ளடக்கம்.

பக்கம்.

I. பத்திராதிபர் குறிப்புக்கள். 241
ஞானபோதினி—சென்னைச் சர்வகலாசாலை
உப ஆக்கிராஸனாதிபதி—சென்னை ரானடே
புத்தகசாலை—காலஞ் சென்ற கெல்லட் துரை

II. 1. ஹானரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் C. சங்கரன்நாயர் ஸி. ஐ. இ. 243
—K. C. துரைசாமி.
2. தமிழர் பழமை —V. கனகசபைபிள்ளை பி. ஏ., பி. எல். 246
3. சுகாதார தருப்பணம்—
திருமணம் செல்வகேசவராயமுதலியார் எம். ஏ.... 249
4. வங்காளா நாலணு பண்டு—வி. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. 253
5. ஸ்ரீமத் கம்பராமாயண அருங்கவி விளக்கம்—
பண்டிதர்-தி. வேங்கடராம ஐயங்கார்... 254
6. ஜீவதத்துவ விளக்கம்—1. பல்லிகள்.—
V. N. ஐயங்கார் எம். ஏ... 259
7 குலசேகரீ—ஓர் நாடகம்.—K. S. வரதாசாரி பி. ஏ. ... 261
8. திருமாலின் பன்னிரு நாமப் பொருள் விளக்கம்.—
பண்டிதர்-தி. வேங்கடராம ஐயங்கார்... 267

III. நவீனப் பிரசங்கத்திரட்டு. ... 270
கனம் கோகலேயின் ரானடேயைக்குறித்த பிரசங்கம்.

IV. பலபத்திரிகா விந்தார மஞ்சரி. ... 272
1. வேமன்ன மகாகவி பத்யங்கள்.—2. விதை பொறுக்கி எடுத்தல்

V. பலதுறைக் கலாவிசேடக் குறிப்புகள். ... 278
1. வியவசாயம், கைத்தொழில், வியாபாரம்—2. வைத்தியம்.

VI. புத்தக வரவு. ... 280

சென்னை:
தாம்ஸன் கம்பெனியார்
அச்சியற்றியது.

1904.

வருஷசந்தா ரு. 2—8—0. சஞ்சிகை ரு. 0—4—0.
வேண்டுவோர் மதராஸ் லிடரரி பூரோ காரியதரிசிக்கு எழுதவேண்டியது.

# தமிழர் பழமை.

(இச்சஞ்சிகையின் 248-ம் பக்கத்தொடர்ச்சி.)

உரையாசிரியருட் சிறந்தவரான நச்சினார்க்கினியரும் அகத்தியனாரே தமிழில் முதனூல் இயற்றினாரென்றும், அம்முதனூல் வியாசர் ஆரியருடைய வேதத்தை நான்கு கூறு செய்ததற்கு முந்தினதென்றும், வற்புறுத்தி இங்ஙனம் கூறுகின்றார்:—

"முந்துநூல் அகத்தியமும், மாபுராணமும் பூதபுராணமும், இசை நுணுக்கமும். அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன: எழுத்துச் சொற் பொருள் யாப்பும், சந்தமும், வழக்கியலும், அரசியலும், அமைச்சியலும், பார்ப்பன வியலும், சோதிடமுங், காந்தருவமும், கூத்தும் பிறவுமாம். புலமென்ற திலக்கணங்களை. பனுவலென்ற தவ்விலக்கணங்களெல்லா மகப்படச் செய்கின்ற தோர் குறி; அவையிதனுட் கூறுகின்றவுரைச் சூத்திரங்களானு மரபியலானு முணர்க. பாண்டியன் மாகீர்த்தி யிருபத்துநாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானாதலி னவனு மவனவையிலுள்ளோருமறிவுமிக்கிருத்தலி னவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறியகடாவிற்கு விடை கூறினார். அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி 'நீர் தொல்காப்பியன் செய்த நூலைக்கேளற்க' வென்று கூறுதலானுந், தொல்காப்பியனாரும் 'பல்காலஞ்சென்றுயான் செய்த நூலை நீர்கேட்டல் வேண்டுமென்று கூறுதலானு, மிவ்விருவரும் வெகுளாம லிந்நூற்குக் குற்றங்கூறி விடுவலெனக்கருதியவர் கூறியகடாவிற் கெல்லாம் விடை கூறுதலினரிறபவென்றார். அவர் கேளன்மினென்றற்குக்காரணமென்னை யெனின், தேவரெல்லாருங் கூடி யாஞ்சேர விருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை யுயர்ந்ததிதற்கு அகத்தியனாரே யாண்டிருத்தற் குரியரென் றவரை வேண்டிக்கொள்ளவவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு பின்னர் யமதக்கினியாருழைச்சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக் கொண்டு, புலத்தியனாருழைச்சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை யவர் கொடுப்ப நீரேற் றிரீஇப்பெயர்ந்து துவாரவதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண்ணரசர் பதினெண்மரையும் பதினெண்கோடிவேளிருள்ளிட்டாரையுமருவாளரையுங் கொண்டு போந்து காடு கெடுத்து நடாக்கிப் பொதியிலின் கணிருந் திராவணனைக் கந்தருவத்தாற் பிணித் திராக்கதரை யாண் டியங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி நீர் சென்று குமரியாரைக் கொண்டுவருகவெனக் கூற வவரு மெம்பெருமாட்டியை யெங்ஙனங் கொண்டுவருவலென்றார்க்கு முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளமகல நின்று கொண்டு வருகவென்றார்க் கவரு மங்ஙனங்கொண்டு வருவழி வையை நீர் கடுகிக் குமரியாரை யீர்த்துக்கொண்டு போயவழித் தொல்காப்பியனார் கட்டளையிறந்து சென்றோர் வெதிர்ங்கோலைமுறித்து நீட்ட வது பற்றி யேறினாரது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையுந் தொல்காப்பியனாரையுஞ் சுவர்க்கம்புகாப்பிரெனச் சபித்தார். யாங்களொரு குற்றமுஞ் செய்யாதிருக்க வெங்களைச் சபித்தமையா னெம்பெருமானுஞ் சுவர்க்கம்புகாப்பிரென வகத்தியனாரையுஞ் சபித்தாரதனானவர் வெகுண்டாராதலினவன் செய்த நூலைக் கேளற்கவென்றார். நான்கு கூறுமாய் மறைந்த பொருளுமுடைமையா னான்மறை யென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமுந் தவ்வாகாரமுஞ் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமுமென்பாரு முளர். அது பொருந்தாது. இவரிந்நூல்செய்த பின்னர் வேதவியாதர் சில்வாழ்நாட் சிற்றறிவினோருணர்தற்கு நான்கு கூறாகச் செய்தாராதலின். முற்கூறிய நூல்கள்போல வெழுத்திலக்கணமுஞ் சொல்லிலக்கணமுமயங்கக் கூறினாரென்றற் கெழுத்து முறை காட்டி யென்றார். வரைப்பின் கண்ணே தோற்றி நிறுத்தவென்க."

(தொடரும்)

V. கனகசபை பிள்ளை. B. A., B. L.

# ஞானபோதினி

"மதராஸ் லிடரரி பூரோ" விலிருந்து வெளிப்படும்

## மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—திருக்குறள்.

சம்புடம் VII. } 1904-ம் ௵ ஜூலை, ஆகஸ்டுமீ { புத்தகம் 7.

## ஞானபோதினி.

ஜூலைமீ த்திய தனிச்சஞ்சிகையை நிறுத்தி ஜூலை ஆகஸ்டு மாதங்களுக்கு இந்தச் சஞ்சிகையைப் பிரசுரித்துள்ளோம். காரணம் காலதாமதமாவதை நிவிர்த்திக்கும் கருத்தே. ஜூலை மாதத்திய சஞ்சிகைக்குப் பதிலாகத் தைமாதத்தில் ஓர் சித்திரச் சஞ்சிகையை வெளிப்படுத்திச் சந்தாதாரர்களுக்குச் சந்தோஷ மூட்டுவோம், இனிமேல் அந்தந்த மீ த்திய சஞ்சிகையை அந்தந்த மீ 3-ம் வாரத்திற்குள் வெளிப்படுத்துவதற்கேற்ற ஏற்பாடனைத்தும் செய்துள்ளோம். இதற்கும் ஞானபோதினி இன்னும் பல பல புதிய அங்கங்களோடு வெளிப்போகவும், சாதாதாரர்கள் எம்மை யாதரித்து ஊக்கமருள்வார்களாக.

---

### சென்னைச் சர்வகலாசாலை உப அக்கிராஸநாதிபதி.

சென்ற சில மாதகாலமாகச் சென்னை சர்வகலாசாலை உப அக்கிராஸநாதிபதி ஸ்தானத்தை வகித்திருந்த ஆனரபிள் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கள் விடுதலைப்பத்திரம் அனுப்பியதின் பேரில்

ஆனரபில் ஸர். ஆர்னல்ஒயிட் துரையவர்கள் அவ்வுத்தியோகத்திற்கு நியமனஞ் செய்யப்பட்டார்கள்.

---

## சென்னை ரானடே புத்தகசாலை.

மிக்க கீர்த்திபெற்ற நீதிபதி ரானடே அவர்கள் ஞாபக சின்னமாக மதராஸ்புரியில் ஒரு புத்தகசாலையொன்று ஜுலைமீ அமைக்கப்பட்டது. அதனை யமைக்குந் தினத்தில்வந்து ஸபாநாயகராயிருந்து கவுரவித்தவர் மும்பை வாஸியாகிய ஆனரபில் கோக்கலே என்பவர். இவர் நாடுமுழுது மறிந்த சிறந்த் தேசாபிமானி. சென்னையிற் றங்கிய சில நாள்களுள் அநேகரோடு ஸம்பாஷித்தனர். சில விடங்களிற் பிரசங்கங்கள் செய்தனர். கண்டவர் கேட்டவரெல்லா மவரை மிகக் கொண்டாடுகின்றனர். இவர் பிரசங்கத்தின் சில பாகம் இச்சஞ்சிகையினுள்ளே காணலாம்.

---

## காலஞ் சென்ற கெல்லட் துரை.

ஜுலைமீ கல்வி யபிமானிகளுக்கெல்லாம் துக்கம் தருவதாகிய ஸமாசாரம் ஒன்று எங்காதிற்கெட்டியது.—சென்னைக்கிறிஸ்தவ கலாசாலையில் சரித்திர போதகாசிரியராயிருந்த கெல்லட் துரையவர்கள் சென்ற ஜுன்மீ 29உ இங்கிலந்தில் வைத்துத்திடீரென்று இறந்தனர். சின்னாண் முன்னர்த் தேக ஸௌக்கியத்தை யுத்தேசித்து வழக்கப்பிரகாரம் ஒரு வருஷ பர்லோரஜாவின்பேரில் தம் பிறப்பிடமாகிய இங்கிலந்து தேசத்திற்குப் பிரயாணமாயினர். போகும் மார்க்கத்திலேயே தம் மாற்றுந் தாயார் மரண சமாசாரங் கேள்விப்பட்டு வழியில் காலம் போக்காது விரைவில் தம் நாடடைந்தனர். அங்கேபோய் இரண்டு மூன்று நாள் தம் சிநேகிதரோடானந்தமாய்க் காலத்தைக் கழித்துக்கொண்டும் சென்னை நண்பர்களுக்கு நிருபங்கள் எழுதிக்கொண்டும் ஸுகமாயிருந்தவர் திடீரென்று பிணியாற் பீடிக்கப்பட்டு இவ்வுலகந் துறந்தனர். இவருக்கு வயது நாற்பத்திரண்டாகிறது. இவர் பிதா இன்னும் ஜீவித்திருக்கின்றனர். இவர் இங்கிலந்து கலாசாலைகளிற் கற்ற காலத்தில் பெற்ற பெருமைகட்கும் பரிசுகட்கு மளவில்லை. ஸாதாரணமாய் அநேகராற் பெறுதற்கரிய பெருமைகளெல்லாம் இவர்க்கு ஸுலபசாத்தியமாயிருந்தன. இவர் சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைக்கு வந்தும் ஒருவியாழ

வட்டம் தானுகின்றது. தாமெடுத்துக்கொண்ட வேலைகளை மிக்க ஊக்கத்தோடு செய்யும் உளமும் திறனும் வாய்ந்தவர். இவரிடத்திற் கற்ருர் இவரை யொருநாளு மறவார். ஸர்வகலாசாலையில் ஒரு அங்கத்தராயிருந்து அங்குச் செய்த நன்மைகள் அநேகம். போதகாசிரியர்களை யெல்லாம் பரஸ்பர சிநேகத்தோடு பொது நன்மைக்காக உழைக்கச் செய்வதை யுன்னி "மதராஸ் டீச்சர்ஸ் கில்டு" என்னும் ஒரு ஸங்கம் உண்டாய்த் தழைத்தற்கு இவரே மூலகாரணமாயிருந்தார். "திராவிட வர்த்தமானி" என்னுந் தமிழ்ப் பத்திரிகையொன்ருரம்பித்து அதனைத் தாமாகவே சில வருஷங்கள் நடத்திவந்தார். தம்மாணுக்கர்களென்ற வரையறையில்லாது தாம் ஆசிரியராயிருந்த கலாசாலையிற் கற்கும் மாணுக்கர் யாவராயினும் அவர்களிடத்தெல்லாம் அன்பு பாராட்டிவந்தார். பிரதி சனிவாரமும் தம் கிருஹத்தில் அம்மாணவர்கள் வந்து விளையாடிச் சம்பாஷித்துக் களித்தற்கு வேண்டிய அநுகூலங்கள் செய்து வைத்திருந்தார். இவ்வளவு உபகாரியாயிருந்தபுலவர் சிகாமணி இவ்வளவு இளம்பிராயத்தில் இரண்டு குழந்தைகளையும் அவற்றின் தாயையும் துயருறவைத்துப் பரலோகம் புக்கதைக் கேட்டவர் யாவர்தான் விசனிக்கார்?

---

## HON'BLE MR. JUSTICE C. SANKARAN NAIR, C. I. E.

## கனம் ஜஸ்டிஸ் C. சங்கரன் நாயர் ஸி. ஐ. இ.

---

"கற்றறிந்த நாவினர்."

"ஆன்ற குடியன் பெண்பதநல் லறநீ திகளின் வழுவாமை
சான்ற மக்கட் பண்பாகுந் தன்னை யுடையார் நகையானும்
மான்று மிகழார் பகையிடத்து மதியா ரிவர்த நற்குணமே
யேன்ற வுலகம் பாராட்டு மெல்லாப் பயனு மவர்மாட்டாம்."—

விநாயக புராணம்.

சங்கரன் நாயர்பொன்னுணித் தாலூக்காவிற் பிறந்து வளர்ந்த ராமுண்ணிப் பணிக்கரது தவப்புதல்வர். இராமுண்ணிப் பணிக்கர் அந்தத் தாலூக்கா ரெவினியூ தாசில் வேலையில் அமர்ந்திருந்து காலமானவர். வள்ளுவ நாட்டில் தந்தையார் தாசில் உத்தியோகம் வகித்திருந்தபோது சங்கரன் நாயர் அங்காடி புரத்திலிருந்த சிறிய பள்ளிக்கூட மொன்றினுக்கு

அனுப்பப்பட்டார். அதிற் சொற்ப காலம் வாசித்துப் பின்னர் கல்லிக்கோட்டைக்கு ஏகினர். அங்கே எப். ஏ. பரீக்ஷையிற்றேறினர். 1875ஷூம் பி. ஏ. க்கு வாசிக்கச் சென்னைக்கு வந்தார்; உழைத்தார்; படித்தார். பரீக்ஷையிற்தேர்ந்தார். வாசித்து வந்த இராஜதானிக் கலாசாலைப் போதகர்களுக்கு இவர் மீது பூரண விசுவாசமும் பெருமதிப்பும் இருந்தது. அறிவு அறிவுடையோர் மதிப்பைப் பெறுவது மதிசயமா? பிறகு தமது சிந்தையைச் சட்டபாடத்திற் செலுத்தினர். அதிலேயே அமிழ்த்தினர். அது சட்ட ஞானக் கடலுள் ஆழ்ந்து அரும் பொருள்களை ஆராய்வான் புகுந்தது. கண்டு கேட்டோரெல்லாரும் அதிசயப்படுமாறு 1879-ம்ஷூத்தில் சட்ட பரீக்ஷையிலும் தேறினர். இவர் முதற் பிள்ளையாகத் தேறினரென்றால் இவரை விடச் சமர்த்தர் மற்றியார் உளர்? பிறகு பாரிஸ்டர் ஷெப்பர்ட்டு துரையிடம் வேலை பழகினர். அதனிலும் கைதேர்ந்தார். ஹைகோர்ட்டு வக்கீல் சங்கர நாயர் எனப் பெயர் பெற்றார். இது 1880-ம் வருஷம் என்றோர்க.

ஹைகோர்ட்டு வக்கீலான கொஞ்சகாலத்திற் கெல்லாம் இவரது சட்ட ஞானத்தை மெச்சி ஹைகோர்ட்டார் இவரை பொன்னாணி டிஸ்திரிக்ட் முன்சீப் வேலையிலமர்த்தினர்கள். தாசில் வேலையைத் தந்தையார் பார்த்த விடத்திலேயே முனிசீப் வேலையைத் தாம் பார்க்கப் பிரியப்பட்டு இவர் சென்றாரேனும், நெடுங்காலம் உத்தியோகஸ்தராயிருந்தாரல்லர். சேலம் இராமசாமி முதலியாரும் உத்தமபாளையம் முனிசிப்பாகப் போனவர் பிறகு இராஜினாமாக் கொடுத்துவிட்டுத் திரும்பினர். விசாலித்த ஞானத்தோடு விசாலித்த கல்விக்கடலின் கரையைக் கண்டவர்கள் உலகோர்க்கு உயர் நீதி மொழியவும் உயர் நீதிக்காக உழைக்கவும் பாடுபடுவதை விட்டு முனிசிப்பாகக் குக்கிராமங்களில் அமர்வார்களா? அமரவும் விடுமா? ஒவ்வொன்றையும் செய்து வைப்பதற்கொருவர் உளரே. அவருக்கு இதனைச் சரிவரக் கவனிப்பதை விட வேறென்ன கடமை!

---

முனிசிப் வேலையை விட்டு மறுபடியும் சென்னைக் கேகினர். நியாயவாதம் புரிவதாயினர். மனநொந்து பொருளிழந்து அவதிப்பட்டு வந்தடைந்தவர் தமக்கு பற்றுக்கோடாகி நியாயம் கிடைக்கப் பாடுபட்டார். நற்கீர்த்தி வாங்கினர். சட்ட ஞானத்தில் இவர் எவர்க்கும் பின் வாங்காதவராயிருந்ததைக் கவர்ன்மெண்டார் நன்கறிந்து மலையாள நிலவனுபோகக் கமிட்டி (Land Tenure) யில் 1886-ம்ஷூ இவரை ஓர் மெம்பராக்கினர்கள். கமிட்டியிலே உயர்வாயொழுகிக் குடிகளுக்குச் சாதகத்தையும் அரசாங்கத்தார்க்கு உதவியையும் செய்து இருதிறத்தினர்கள் வந்தனத்தையும் மேம்பாட்டையும் பெற்றார். கவர்ன்மெண்டார் இவரை 1889-ம்ஷூ சென்னைச் சட்ட நிருபண சபையின் மெம்பராக்கினர்கள். இவர் இடை விடாது 1897-ம்ஷூ வரை சட்ட நிருபணர்களில் ஒருவராயிருந்தார். இவர் நியாயத்

தை விடார்; அரியாயத்தைசகியார். தமது சொந்தபுத்தியையே ஒவ்வொன் றிலும் செலுத்துவார். மற்ருேர் வலையிற் கட்டுப்படார். இவை யெல்லாம் இவரை நன்கறிந்தவர்களுக்கு நன்கு தெரிந்துள்ள விஷயங்கள். கவர்ன் மெண்டாரால் மதிப்படையுமாறே இவர் சட்ட சபையில் ஒழுகினுர். மே லும் இவர் தமது ஜனன பூமிக்கு முற் குறித்த வழியில் உழைத்தது போல வே தமது ஜனன நாட்டவர்களுக்கு ஓர் புதிய வழியைக் கூட்டிவைக்கமிக வும் உழைத்தார். மலையாளத்துக் கலியாண வழக்கங்களைப் பற்றிய மசோ தா ஒன்றினைச் சட்ட சபைக்குக் கொண்டு வந்து ஜனங்களுக்கு ஒப்ப வாதித் துச் சட்டமாக்கினுர். இவரைக் கவர்ன்மெண்டார் தமது வக்கீலாகப் பல முறையும் நியமித்ததுண்டு.

இவர் எப்பொழுதும் பரந்த மனதுடையவர்; சிறந்த உணர்ச்சியுடை யவர்; நிறைந்த புகழ் படைத்தவர். இவர் ஜனங்களுக்குள்ளாக எவ்வாறு சீரும் சிறப்பும் பெற்று வருகிருர் என்பதை விளக்க ஒரே ஒரு செய்தியே போதும். அதாவது நாயர் அமராவதியிற் கூடிய காங்கிரஸ் மகா சபையின் பிரஸிடெண்டா யமர்த்தப்பட்டார். அப்பொழுது இவர் செய்த பிரசங்கம் சிறக்கச் சிறந்ததாயிருந்தது. இவருக்குள்ள உலகனுபவத்திற் கிணை எவரு டையது மாகாதென அதனுல் எல்லோருக்கும் வெளிப்படையாயிற்று. இவர் சென்னை மாகாணக்கூட்டத்துச்சபா நாயகம் வகித்ததுமுண்டு. 1903-ம் ஆண்டு சென்னையிலே கூடிய காங்கிரஸ் மகாசபையைஅனுசரித்து நடந்தேறிய பொ ருட்காக்ஷிச்சந்தையின் சபா நாயகம் வகித்திருந்தவரும் இவரே. இவர் செ ன்னையூனிவர்ஸிடியின் பிரதிநிதியாகச் சென்னை சட்ட சபையில் விளங்கிய வர்.

இவர் நற்றிட தேக காத்திரம் படைத்தவர்; நல்லறிவுற்றவர்; நல்லொ ழுக்கம் பூண்டவர். இவருக்குற்ற செல்வாக்கே செல்வாக்கு; அது எவருக் குத்தான் உண்டு! இவர் சட்ட சபையில் மொழியும் வார்த்தைக்குப் பெரு மையுண்டு; இவர் எழுத்திற்கு மரியாதை உண்டு; இவரது அபிப்பிராய மே சங்கரனபிப்பிராயம் எனப்படும். இவர் யூனிவர்ஸிடி மெம்பர்; இவர் சீமைக்கு ஒரு முறைக்குமேற் பிரயாணம் போனவர். இவர் ஐரவர்களு க்கு நண்பர்; ஆரியர்களுக்கு ஆப்தர்; பிராமண விசுவாசி; சுதேச பாஷாபி மானி. சுதேசபாஷைகளைவளர்த்திடுலொழிய நாடுக்ஷேமமடையாதென்னும் பேரெண்ணம் இவருக்கு மெத்தவும் உண்டு. இவர் சில மாதங்களுக்கு முன்னரே ஜஸ்டிஸ் பாஷியம் ஐயங்கார் ஸ்தானத்திலமர்த்தப்பட்டாரே னும் அமரவில்லை. இப்பொழுது ஐகோர்ட்டு ஜட்ஜாய் அமர்ந்தது நாட்டி ற்குப்பெருமை; நாட்டவர்களுக்கு இறும்பூது. இவருக்கு ஸி. ஐ. இ. ப்பட்ட மும் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. இது செய்தது கவர்ன்மெண் டாருக்குத் தகுதி. எனெனில், அன்னோர்

"செல்வர்க்கே சிறப்புச் செய்யும் திருந்துநீர் மாக்கள்."

K. C. துரைசாமி.

# ANTIQUITY OF THE TAMILS.

## தமிழர் பழமை.

### புறவுரை.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுண்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்."

எனப் பண்டையோர் தமிழ்மொழியை வையத்து மாந்தர் வழங்கும் மொழிகளுக்கு எல்லாம் சிறந்ததென்று மேம்படப் புகழ்ந்து பாடினர். மலையின் உச்சியிற் றோன்றி அறிவின் மிக்கார் வணங்க ஞாலத்து இருளை அகற்றும் பொருள்கள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஒன்று மின்னலைப் போல் ஒளி வீசும் ஒற்றை ஆழியிற் செல்லும் செஞ்ஞாயிறு. மற்றது 'தன்னேரிலாததமிழ்' என்றார். இங்ஙனம் புகழப்பட்ட தமிழ்ஒருமலையினிடத்தே அதாவது, ஒருமலை நாட்டிலே பிறந்ததென்றார். அவ்வாறே பாரதம்பாடிய வில்லிபுத்தூராருடைய புதல்வராகிய வரந்தருவார் என்னும் அருங்கவிப்புலவரும்

"பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்றாள்."

என்த் தமிழ் அணங்கினுக்குப் பல்லாண்டு கூறுங்கால் அவ்வணங்கு பொருப்பிலே பிறந்தாள் என்றார். ஒருமலையி னிடத்தேபிறந்து, தென்னாட்டுக்கு அரசனாகிய பாண்டியனுடைய புகழாகிய தொட்டிலிலே வளர்ந்து, சங்கப்பலகையிலே உட்கார்ந்து வைகையாற்றிலே சம்பந்த மூர்த்தி நாயனார் இட்ட ஏட்டிலே தவழ்க்கற்று அந்நாயனார் நெருப்பிலே இட்ட ஏட்டின் மேலே எழுந்து நின்ற தமிழாகிய தெய்வப்பெண் கற்றோருடைய நினைவிலே நடந்து பூதேவின் மருங்கிலே இன்னும் பேதைப் பருவம் கடவாது விளங்குகின்றாள் என உரைத்தார்.

இப்பொருளை அமைத்தே அமுதசாகரரும் தாம் இயற்றிய யாப்பருங்கலக்காரிகையின் அவையடக்கத்திலே;

"தேனார்கமழ் தொங்கல் மீனவன்
கேட்பத் தெண்ணீ ரருவிக்
கானார் மலயத் தருந்தவன்
சொன்ன கன்னித்தமிழ் நூல்."

எனக்கூறினர். இதனால் மலயம் என்னும் மலையிலே தமிழ் பிறந்ததென்றும், மீனவர் கோனாகிய பாண்டியனுடைய சபையிலே அரிய தபசியாகிய அகத்தியன் தமிழ் நூல்களை முதலில் அரங்கேற்றினரென்றும் இயம்பினர். சமண சமயத்தவராகிய இவ்வமுதசாகரர் கூறியதற்கு இணங்க, வீரசோழியம் இயற்றிய புத்தமதஸ்தராகிய புத்த மித்திரனும்

"ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமிழ்"

என உரைத்தார்.

கல்வியிற் பெரியாராகிய கம்பரும், தமது இராமாயணத்திலே, ஆரணிய காண்டம் அகத்தியப் படலத்திலே அகத்தியனை

"தழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்."

எனப்புகழ்ந்தார். பின்னும்,

"என்றுமுள தென்றமி ழியம்பி யிசை கொண்டான்"

என்றார்; ஆகையால் தமிழ்மொழி என்று முள்ளதென்றும் தமிழ் நூல்களை அகத்தியன் ஆதியில் இயற்றினனென்றும் தமது எண்ணத்தை வெளியிட்டார்.

நான்கு வேதங்களிலும் பூர்வமாகிய இருக்குவேதத்திற்குக் கர்த்தர்களாகிய இருஷிகளில் அகத்தியரும் ஒருவர் ஆகையால், இருக்குவேதம் உண்டான ஆதிக்காலத்திலே தமிழில் முதனூல்களும் உண்டானவென்று ஏற்படுகின்றது.

இதற்கிணங்கவே இறையனார் அகப்பொருளுக்கு நக்கீரனார் தாம் எழுதிய உரையிலும் பின்வருமாறு கூறினர்:—

"தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கமென மூன்று சங்கம் இரீஇயனார் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்க மிருந்தார் அகத்தியனாரும், திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்ற மெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்பது; அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினரென்பது. அவர்களாற் பாடப்பட்டன

வேத்துணையோர் பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரைய மென இத்தொடக்கத்தன; அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரென்பது; அவர்களைச்சங்கமிரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்டமதுரை யென்ப; அவர்க்கு நூல் அகத்திய மென்ப.

"இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும், தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும், வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன்மாறனும், துவரைக்கோமானும், கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினாரென்ப! அவர்களாற்பாடப்பட்டன: கலியும், குருகும், வெண்டாளியும், வியாழமாலை யகவலுமென இத்தொடக்கத்தன என்ப. அவர்க்குநூல், அகத்தியமுந் தொல்காப்பியமும், மாபுராணமும்இசை நுணுக்கமும், பூதபுராணமுமென இவை; அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப; அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்பது; அக்காலத்துப்போலும் பாண்டியனாட்டைக் கடல்கொண்டது.

"இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியருஞ் சேந்தம் பூதனாரும், அறிவுடையானாரும், பெருங்குன்றூர்க்கிழாரும் இளந்திருமாறனும், மதுரையாசிரிய னல்லந்துவனாரும், மருதனிள நாகனாருங், கணக்காயனார்மகனார் நக்கீரருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினாரென்ப; அவர்களாற்பாடப்பட்டன நெடுந்தொகை நானூறுங், குறுந்தொகை நானூறும், நற்றிணை நானூறும், ஐங்குறுநூறும், பதிற்றுப்பத்தும், நூற்றைம்பதுகலியும், எழுபது பரிபாடலுங், கூத்தும், வரியும், பேரிசையுஞ், சிற்றிசையுமென்ற இத்தொடக்கத்தன; அவர்க்கு நூல் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற் றைம்பதிற்றி யாண்டென்பர். அவர்களைச் சங்கமிரிஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த *முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப; அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப."

(இதன் தொடர்ச்சியை இச்சஞ்சிகையின் தமிழ்ப்பெயர்த்தாளின் பின்புற நோக்குக).

* கடைச்சங்கமிரீஇயமுதற்பாண்டியன் வங்கிய சேகரனென்பது திருவிளையாடற் புராணமுடையார் கூற்று.

# ON HYGIENE I.

## சுகாதார தருப்பணம்.

நோயற்றவாழ்வே வாழ்வு. நோய்க்கிடங்கொடேல், விரதங் கெட்டாலும் சுகம் தக்கவேண்டும். சுகமாவது, மனமொழி மெய்கள் வயப்பட்டிருப்பதும் அவற்றாற் செய்யலான கருமங்களைச்செய்ய வியலுதலுமாகிய நிலைமை: யாக்கை நொய்ம்மை நோக்கின்றூய்மை கரணங்கள் தொழிற்குரிய வாதல் பசி மிகுதல் முதலாயின குறிகளால் உடலில் யாதொரு பிணியுமின்றெனத் துணிதலான நிலைமை. சுகாதார விளக்கத்தில், நாம் உண்ணும் உணவை ஜீரணிக்கச் செய்கிற ஜீரண கருவிகளும், உணவிலிருந்து இரத்தத்தை உண்டாக்கி அதைத் தேகமெங்கும் வியாபிக்கச் செய்கிற இரத்தக்கருவிகளும், இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்படி ஆகாயத்தை உட்கொள்ளும் சுவாசக் கருவிகளும், தேகத்திலுள்ள மற்றக் கருவிகளும் யாதொரு சேதமடையாமல் அததற்குரிய தொழிலை வருத்தமின்றி நடத்தும்பொழுது, நாம் யாதொரு துன்பத்தையும் அடையாமல் நமக்குள்ள பல காரியங்களைக் குறைவின்றிச் செய்யலான தேக நிலைமையே சுகமெனப்படும் என்றுரைத்திருக்கின்றது. இதன் மறுதலையான நிலைமையே அசௌக்கிய மென்பதாம். சுகங்கெட்டவன் தானும் ஒரு பயன் எய்தான்; பிறர்க்கும் பயன்படான். இவன், வறிஞனயின், தன்னுறவினர் முதலாயினர்க்குக் கால நஷ்டமும் திரவிய நஷ்டமும் உண்டாக்கி அவர்கட்கு வீண்சுமையாகிறான். தனிகனயின் தன் பொருளால் நுகர்தலான இன்பநுகர்தலின்றி வறிஞனேயாகிறான். பலாட்டியராய் யானைபோல்வாரும், சுகங்கெட்டால், பலஹீனராய்ப் பூனை போல்பவராகின்றனர். "சாதல் விளியாவரு நோயினன்றால்." சுகங்கொடாமல் நீடியவாயுள் பெற்றவர்களே நண்பர் உறவினர் முதலானவர்க்கும் உலகிற்கும் பெருநன்மை இயற்றத்தக்கவர்கள்.

பழவினையால் வருவனவும் பாரம்பரியமாக வருவனவுமான பிணிகள் நீங்க, ஏனையவெல்லாம் சுகாதார விதிகளை யுணர்ந்து அவைகளை யனுட்டியாமையால் உண்டாவனவேயாம். அவ்விதிகளை யனுட்டிப்பவர்கள் நோய்க்கிடங்கொடாமல் ஆயுண்முழுவதும் சுகித்திருக்கலாம். தன்னோய்க்குத் தானே மருந்து. சுகத்துக்குச் சாதகமானவற்றைக் கைவிடாமல், அதற்குப் பாதகமானவற்றைக் கடிபவர்களே "தமக்கு மருத்துவர் தாம்." இளமையில் மூப்புத்துன்பமடைதற்கும் முதுமையில் இளமையின்பநுகர்தற்கும் அவரவரே காரணர். "இளமையை மூப்பென்றுணர்தலினிதே".

ஐரோப்பிய மருத்துவப் புலவர்கள் சுகாதார சாஸ்திரத்தை இயன்றமட்டில் தீர்க்கமாக வரையறை செய்திருக்கின்றனர். இங்கிலீஷில் பயிற்சியில்லாதவர் பொருட்டு, அதில் சுவல்பசாத்தியமான சில விஷயங்களை மாத்

திரம், தமிழ்நூற் கருத்துக்களையும் இடை இடையில் தழுவி, இந்தவியாசத்தில் சுருக்கமாக விளக்குவோம்.

**சுத்தம்:**—இதன் பெருமையைச் "சுத்தம் சோறிடும்" என்பதனாலறிக. சுத்தமாவது மலினமில்லாத தன்மை. ஆங்கிலேயர்கள் தேகசுத்தியை ஆன்ம சுத்திக்கிரண்டாவதாகக் கொள்கின்றனர். வீட்டைச் சுத்தி செய்வதும் பாண்டங்களைச் சுத்திசெய்வதும் நீராடுவதும் தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரிப்பதுமே நமது மதானுசாரத்தில் முக்கியாமிசம். "கந்தையானாலுங் கசக்கிக் கட்டு, கூழானாலுங் குளித்துக்குடி" என்பதே நம்மவர்களில் வறிஞரும் வழங்கும் மூதுரை. ஆகவே இவர்களுக்கு இதைக் குறித்து வெகுவாய் விரித்துரைக்கவேண்டா. ஆயினும் சற்றும் அழுக்கு நீங்காமல் சாஸ்திரத்தின் பொருட்டு வஸ்திரந் தோய்ப்பதும் ஸ்நாநம் பண்ணுவதும் முதலிய துராசாரங்கள் சிலரிடத்தில் உண்டு. "செய்வன திருந்தச்செய்" என்பதை எவரும் எவ்விஷயத்திலும் மறத்தலாகாது. வாயு ஜலம் ஆஹாரம் முதலியவற்றின் சுத்தத்தைக் குறித்து நம்மவர்கள் நன்றாய்க் கவனிப்பதில்லை. இவற்றின் அசுத்தமே விஷபேதி முதலிய கொடிய வியாதிகட்குக் காரணமாகையால் இவற்றைக் குறித்துச் சிறிது கூறுவது இன்றியமையாததாகும்.

பருக நீரின்றியும் உண்ணச் சோறின்றியும் சில நாளளவும் சீவித்திருக்கலாம். சுவாசம் விடாமல் ஒரு நிமிஷநேரமும் இருக்கமுடியாது. சீவன் எனப்பொருள்படுகிற உயிர் என்னுந் தமிழ்மொழி காற்று என்னும் பொருள் படுகிறது. இதனால் சீவனுக்கு முக்கியாதாரமாவது காற்று என்பது போதரும். காற்றில் ஜீவாதாரவாயு உப்புவாயு கரியமிலவாயு நீராவி என நால்வகை அமிசங்கள் உண்டு. இவற்றில் ஜீவாதாரவாயு சரீரத்தில் உள்ள இரத்தத்தைச் செவ்விரத்தமாகச் செய்யும். செவ்விரத்தம் ஆரோக்கியத்துக்கு ஆதாரமானது. கரியமிலவாயுவின் சேர்க்கையால் இரத்தம் அசுத்தமாகிய காரிரத்தமாயின் வியாதி உண்டாகும். மார்பில் நுரையீரலில் பரவுகின்ற இரத்தமானது, நாம் உசுவாசஞ்செய்யுங் காற்றிலுள்ள ஜீவாதாரவாயுவைக் கிரகித்துக்கொண்டு, தான் தேகமுழுவதும் பரவியோடி வருகையில் தன்னிடம் சேர்மானமாகும் கரியமில வாயுவை நிசுவாசக் காற்றுடன் வெளிப்படுத்தி விடுகின்றது. ஆகையால் தேகத்தில் இரத்த சுத்திக்குக்காரணம் நாம் சுவாசம் விடும் காற்றேயாம். அசுத்த வாயுவைப்பூரித்தால் செவ்விரத்தமும் காரிரத்தமாகும். சுத்தவாயுவைப் பூரித்தால் காரிரத்தமும் செவ்விரத்தமாகும். ஆதலால் நாம் எப்போதும் சுத்தவாயுவையே சுவாசித்தல் வேண்டும். தன்னாலும் பிறராலும் இரேசிக்கப்பட்ட காற்றும் துர்க்கந்தம் அளாவிய காற்றும் அசுத்தமாகிய நச்சுக்காற்றாகும். காற்றில்லாத ஒடுங்கிய வீட்டினுள்ளும் நெருங்கிய ஜனக்கூட்டத்தினுள்ளும் இருக்கலாது. இருந்தால் அசுத்த வாயுவே பூரிக்கப்படும்.

நம்முடைய வாசஸ்தானங்களில் காற்று சுத்தமாக இருப்பதானல், வீட்டைச் சுற்றிலும் சாலக்கல்மஷங்களும் குப்பை கூளங்களும் அழுகற் பண்டங்களும் இன்றி, வீடுகளும் அடைபட்டிருக்காமல், பெரிய வாயில்களும் பலகணிகளும் அமைந்து, காற்றுத்தாராளமாய் வரவும் போகவுந் தக்கவைகளாக இருத்தல் வேண்டும். வீட்டினருகில் துர்க்கந்தமான நீர் நிலைகள் இருத்தலாகா. மேல் கூரையில் ஒட்டடை முதலியவற்றை நீக்கிவிட வேண்டும். சுவர்களை மலினமாகாமல் பழுது பார்த்தும் மண் தீற்றியும் சுண்ணும்பு பூசியும் வைத்திருக்கவேண்டும். தரையை ஒதமேற வொட்டாமல் திருத்தியும் புதுக்கியும் வைத்துக்கொள்ளுவேண்டும். படுக்கை வஸ்திரங்களை அப்போதைக்கப்போது சுத்தி செய்யவேண்டும். வீட்டினருகில் சேர வொட்டாமல் மலசலங்களை உடனுக்குடனே நீக்குவித்தல் வேண்டும். ஒவ்வொருவரும் அவரவர் வீட்டையுங் கொல்லையையும் இங்ஙனம் சுத்தமாகவைத்திருந்தால், காற்று அசுத்தமாகாமல் சுவாசத்துக்கு யோக்கியமாக இருக்கும். மனிதரிற் சிலர் துஷ்ட சகவாசத்தால் கெட்டுப்போவதுபோல, வாயுவும் ஜலமும் கெட்ட வஸ்துக்களோடு கூடினுல் தாங்கள் கெட்டுப்போவதுமன்றி, அவைகளை உபயோகிக்கின்றவர்களுக்குந் தீங்கை விளைவிக்கின்றன.

ஆகவே வாயுவின் சுத்தத்தைப்போன்று ஜலசுத்தமும் அத்தியாவசியமானதே. "தண்ணீரையுந் தாயையும் பழிக்கலாமா" என்ற மூதுரையை மறவாமல் சிலர் கலங்கற் சின்னீரையும் உண்பர். குளிக்கப்போயும் சேற்றைப்பூசிக்கொள்வர். பருகவும் சோறு சமைக்கவும் உபயோகிக்கும் நீருள்ள கிணறு குளங்களின் அருகில் குப்பை கூளங்களைக் கொட்டி வைப்பதும் மலசலமோசனஞ் செய்வதும் ஆடுமாடுகளைக் கட்டிவைப்பதும், அவற்றில் வஸ்திரங்களைத் தோய்ப்பதும் காலலம்புவதும் ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதும், அவற்றினீரை அசுத்தப்படுத்துங் காரணங்களேயாம். இங்ஙனம் அசுத்தமான நீரை உபயோகிப்பதே விஷபேதி முதலிய கொடிய வியாதிகளுக்குக் காரணமாகுமென ஐரோப்பிய மருத்துவ நிபுணர்கள் கட்டுரைக்கின்றனர். "புறந்தூய்மை நீரானமையும்". அந்நீர் தன்னளவில் தூயதன்ருயின் அதனுல் எங்ஙனம் தூய்மை உண்டாகும்? "நாம் அனுபவிக்கவேண்டிய எல்லாப்பொருள்களையும் சிருஷ்டித்து உலகத்திலே வைத்துவிட்ட கடவுள், தண்ணீரை மட்டும் நம்முடைய ஸ்வாதீனத்தில் விடாமல், ஆகாசத்தில் மேகரூபமாய் வைத்துக்கொண்டு, வேண்டும்போது மழை பெய்வித்து, நம்முடைய பானுதிகளை அடிக்கடி புதுப்பித்துக்கொண்டு வருகிருர். இதனுல் ஜலத்தினுடைய அருமை பெருமை நன்ருய் விளங்குகிறது."

ஸ்நானபானங்களுக்கு ஊற்று நீரும் ஓடு நீருமே யோக்கியம். சூரிய கிரணம படாத நீரும் காற்றுப் படாத நீரும் பாசிநீரும் அதிக சேறுள்ள நீரும் இலையுதிர்ந்த நீரும் புழுவுள்ள நீரும் துர்க்கந்தமுள்ள நீரும் வியாதிகளை விளை

விக்கும். இவைகள் ஸ்நாநம் சமையல் பானம் என்பவைகளுக்கு ஆகாவாம். பானத்துக்கு எவ்வித நீரையும் தெளிவித்து வடிகட்டிக் கொள்வதும் காய்ச்சி வடிகட்டிக்கொள்வதும் உத்தமம்.

"உண்ணுங்கால்
நீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்
பேருரைக்கிற் போமே பிணி."

தண்ணீரைச் சேமித்துவைக்கும் பாத்திரங்களின் உட்புறத்தை அப்போதைக்கப்போது நன்ருய்த் தேய்த்துக் கழுவிச் சுத்தஞ்செய்யவேண்டும்.

ஆஹார சுத்தியாவது அழுகலும் நாறலுமில்லாத தானிய தவசங்களைத் தவிடு மண் கல் கப்பிதிப்பி காம்பு கோது முதலியவைகளை நீக்கிச் சுத்தமான பாத்திரங்களில் அவசியமான சம்பாரங்களைக் கலந்து சுவையுள்ளனவும் ஜீரணிக்கத் தக்கனவுமாக நன்கு சமைத்துச் சுத்தமான பாத்திரங்களிலிட்டு உண்ணுதலாம். பித்தளை முதலிய உலோகங்களாற் செய்த பாத்திரங்களினும் மட்கலங்களே உத்தமம். மட்கலமல்லாதவைகளுக்கு ஈயம் பூசுதல் பரிகாரம். இந்த விவரங்களெல்லாம் பதார்த்த குண விளக்கம் பாகசாத்திர முதலிய வற்ருல் தெளிவாகும். அனுவசியமான சம்பாரங்களையும் வாசனைப் பண்டங்களையும் சேர்ப்பதனுல் கெடுதி விளைவதல்லது நன்மை உண்டாவதில்லை.

சுவாசவாயுவும் ஸ்நாந பானத்துக்குரிய ஜலமும் ஆஹாரமும் சுத்தமாக இருப்பது அவசியமாதல் போலவே, நமது தேகத்தைச் சுத்தமாக வைத்திருப்பதும் தேகாரோக்கியத்துக்கு அவசியமாகும். சரீரத்திலுள்ள மயிர்க்கால்களின் வழியாக வேர்வையாய்க் கழியும் அழுக்குகளெல்லாம் இரத்தத்தினின்று தடையின்றிப் பறியும் பொருட்டும், காற்று வீசுகையில் சரீரத்தின் மேல் வந்து பதியும் தும்பு தூசிகள் ஒழியும் பொருட்டும், தினந்தோறும் சரீரத்தை ஒழுங்காகத்தேய்த்து ஸ்நாநம் செய்தல் வேண்டும். ஸ்நாநத்துக்குப் பிராதக்காலமே தக்கது.

"காலைக் குளிக்குக் கடும்பசியுண் டாநோய்போ
மாலைக் குளிக்கிவைகள் மத்திபமே."

வெந்நீரிலே செய்யும் ஸ்நாநத்திலும் தண்ணீரிலே செய்யும் ஸ்நாநமே உடம்புக்கு அதிக உறுதியைத் தரும். வாரத்துக்கு இரண்டுதரமாயினும் ஒரு தரமாயினும் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் ஸ்நாநஞ் செய்தல்வேண்டும்.

"நோயடருங் காந்திகெடு நுண்ணறிவும் போயொளிக்கும்
தீயகுளிர் துக்கந் தினவுசங்கை-வாய்பேசக்
கூசுதலு முண்டாகுங் கோதாரு மாசுடைக்குப்
பேசுதலு மியாதிதற்குப் பின்."

ஆகையால் அப்போதைக்கப்போது அழுக்கு வஸ்திரங்களைந்து சுத்தமான வெள்ளை வஸ்திரந்தரிக்கவேண்டும்.

"ஓடுந் திரிதோட மோங்காயி சும்பெருகும்
கூடுந் திருவழகுங் கூர்களிப்பு-நீடுமெதி
போதமுறும் வெற்றிவரும் பூரிக்கு மெய்வியர்வி
னேதமறும் வெண்டுகிலுக் கே."

திருமணம்-சேல்வகேசவராய முதலியார், M. A.

---

# FOUR ANNA FUND OF BENGAL.

## வங்காளா நாலணு பண்டு.

---

நமது வங்காள நாட்டுச் சனங்கள் யாண்டும் தேசாபிமானம் பூத்து விளங்குவோரென்பது பிரசித்தமான விஷயம். தேசாபிமானம் கருதிப் பொதுநன்மைக்குப் பாடுபடுபவர்அனேகமாய்வங்காள நாட்டுக்கல்விகேள்விகளால் நிறைந்த கனவான்களே யாவர். இதரமாகாண வாசிகளில் எப்போதும் இவர் தமைப்பின்பற்றியே ஒழுகவேண்டியவர்களா கின்றனர். இப்போது வங்காளா மாகாணத்தில் பிரஜைகள் பெரும்பான்மை நம் நாட்டுக் கைத்தொழில் விருத்தியைக் கருதியும், யந்திரத்தொழில் நம்மவர் கற்றுச் சிறப்படைவதையுத்தேசித்தும், நம்நாட்டுச்சொந்தச்சரக்குகளை நாமே பதம்செய்து வர்த்தகமுறைமையில் பெருநலம் அவ்வழியால் நம்மனோர் அடைடவான் எண்ணியும், வியவசாயத் தொழிலே நம்மவர் நூதனமுறைகளைக்கொண்டு செய்தும், நவீனவிதைகளை விதைப்பித்தும், நவீன எருக்களைப்பலவீன மடைந்த நிலங்களுக்குக் கூட்டியும் நந்தேசத்திற் செல்வம் ஓங்கிவளரும்படி ஒருபெரிய நாலணுபண்டு ஏற்படுத்தியிருக்கின்றனர். நாலணுவுக்குக்குறையாமல் செலுத்துகிறவர்களைச் சந்தாதாரர்களாக ஏற்றுக்கொள்ளுகின்றனராம். ஆயின், பெருந்தொகை யாவராவது கொடுப்பின் அதை ஏற்றுக்கொள்ளத்தடையிராது. இந்தபண்டின் வருவாயைக்கொண்டு நம் சிறுவருக்கு சாஸ்திர சம்பந்தமானவும், கைத்தொழில் யந்திரத்தொழில் விவசாயத் தொழில் சம்பந்தமானவுமான படிப்பைப் போதிக்கும்படியும் நாட்டுச் சாமான்களை சீமைச் சாமான்களைப்போல் பதம்செய்து அவைகளைத்தக்க நாடுகளில் விற்பனை செய்யும் விஷயமாகவும், இன்னும் தேசத்தின் செல்வவளர்ச்சியைச் சம்பந்தப்பட்ட அனேகவிஷயங்களை முடிக்கும்படியாகவும் பலசாதனங்களை நமது பங்காளசோதரர் யோசித்துப்பேசியும்வருகின்றனர்.

இந்தக்காலத்தில் நமது சிறுவரைப் பற்றியும் சிறுமியரைப் பற்றியும் கவர்ச்சி யுறாத கனவான்கள் எங்குமில்லை. படிப்பாளிகள் தத்தம்பிள்ளைகளைப் படிப்பித்தே வருகின்றனர். பாஸ்பண்ணுவோர்கணக்கு அமோகமாய் அதிகப்பட்டுவருகிறது. உத்தியோகம் கிடைப்பதோ நாளுக்கு நாள்கஷ்டமாயிருக்கிறது. பெரியபரீக்ஷைகள் (பீ. ஏ. எம். ஏ.) முதலியன கொடுத்த பின்னரும் நமது சிறுவர்கள் 15 ரூபாயிலும் இருபதுரூபாயிலும் உத்தியோகத்தி லமரவேண்டி யிருக்கிறது. வக்கீல் தொழிலோ சிலருக்குப் போதுமானவருவாயைத்தருமே யொழிய பலருக்கும்கொடாது. இனிச் செய்யத்தக்கதோ வேறொன்றுமில்லை. இதையுத்தேசித்தே பங்காளிகள் தங்கள் பிள்ளைகளிற் சிலரையேனும் ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், முதலிய தேசங்கட் கனுப்பி பலகைத்தொழிற் றுறைகளிலும் இறங்கி தொழிலுணர்ந்து நந் தேசம் திரும்பி அவர்கள் தேசாபிமானிகளாய் வாழ்ச்சியுறவேண்டியே யிவ்வளவு சிரமம் எடுத்துக்கொண் டுழைக்கின்றனர் போலும். நமது சென்னை மாகாணத்திலும் இப்படிப் பட்ட பண்டு ஒன்று நம்மவர் ஆரம்பித்தால் வெகுநன்மையைத்தரும். இதைநம்மனோர் உடனே கவனிப்பார்களென்று கோருகிறோம். தேசாபிமானமுடைய சிலபெருங் கனவான்கள் முன்வந்துதவினால் எந்தக்காரியம் தான்சாயாது. இப்படிப் பட்டபண்டு ஒன்றுசென்னையில் சீக்கிரம் உண்டாக வேண்டுமெனத் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வி. முத்துக்குமாரசுவாமி பி. ஏ.

---

## KAMBAN'S RAMAYANA II.

## ஸ்ரீமத் கம்பராமாயண அருங்கவி விளக்கம்.

---

### சிறப்புப்பாயிரம்.

நொய்தில் நொய்யசொல் நூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்தொளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே.

சொல்முறை :—செய்த செய்தவன் சொல் வைத வைவின் மராமரம் ஏழ்தொளை எய்த எய்தவற்கெய்திய மாக்கதை நின்றதேயத்து நொய்தில் நொய்ய சொல் நூற்கலுற்றேன் எனை. என்னை யென்பது எனையெனத் தொகுத்து நின்றது. ஏ தேற்றப் பொருளில் வந்தது.

கருத்து:—மராமரமேழுந்தொளைபடும்படி பெரியோர்களின் சாப வாக்குப்போல அம்பெய்த இராமபிரானைக் காப்பியத் தலைவனாகக் கொண்ட பெரிய கதையை அமைதி பெறச்செய்த வான்மீகி முனிவரது காவியமானது நிலை பெற்றுள்ள தேயத்திலேயே மிகவும் அற்பமாகிய சொற்களைக்கொண்டு நானும் அக்கதையைக் காவியமாகச் சொல்லத் தொடங்கினேன்.

விசேடம்:—பெரியோர் வழக்கம் பற்றி இக்கவியில் அவையடக்கமும் ஆதிகாவியஞ்செய்த வான்மீகி முனிவரரின் சிறப்பும் கூறப்பட்டன. இராமாயணமும் பாரதமும் இதிகாசம். இதிகாசம் என்பதன் பொருள் வேதம்போல் பரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு வரும் நூல் என்பதாம். கம்பன் இராமாயணம் பாடி 1020வருடங்களாகின்றன. அதற்கும் நெடுங்காலம் முன்பாக ஆதிகாவியஞ்செய்தவர் வான்மீக முனிவராதலின் மேன்மையும் சொன்னயமும் பொருள் நயமும் ஆதிகாவியத்தில் மலிந்துள்ளன. பிற்காலத்தைய நிலை கருதித் தன் சுய சத்திபாற் புனைந்துபாடிய ஏற்றம் ஒன்றே கம்பனிடத்துள்ளது. சிலர் வான்மீகியினும் கம்பன் கருத்துச் சிறந்துளதெனச் சொல்லத் துணிவர். அது பிழை மொழியாம். காலநிலையையும் பாத நான்கும் வகுத்துத் தாமாகவே ஆதிகாவியங்கூறியவான்மீகியின் சிறப்பையும் ஆராயின், கம்பன் வல்லமை வான்மீக முனிவரரின்திறந்திற்குவலாதென்க. 'ஏனைஉவதவைவின் நூற்கலுற்றே'னென முடிபுகூறுதலும் ஒருநெறி. 'செய்தசெய்தவ'னவான் இங்கு வான்மீகி. வல்மீகம் புற்று; அதிற்பிறந்தவர். அதாவது தமதுடலின்மேல் புற்று வளரும் வரை தமது நிட்டைகெடாது தவஞ்செய்தவர். இவர் பிருகு வம்சத்தரான ருக்ஷக்குப்புத்திரராய்ப்பிறந்தவர். குலாசாரத்தை விடுத்து ஓர் குறப்பெண்ணைக் காமுற்று அவளிடத்துப் பல மக்களைப்பெற்றுக் குடும்பப் பாதுகாப்பிற்கு வழியறியாதே வழிப்பறி செய்து தேக யாத்திரை நடத்தி வந்தவர். ஒருநாள் ஸப்தரிஷிகள் வழியில் வந்த போது அவர்களிடத்துள்ள பொருள்களைப் பறித்துக் கொண்டனன். முனிவர்கள் நீ செயும் பாவச்செயலுக்கு உனது பெண்டு பிள்ளைகளுக்குப் பங்குண்டாவென்று அறிந்து வரச்சொல்லி அவ்வகையால் அறிவுதிக்கச்செய்து அவர்கள் இவன் முன் பிறப்புணர்ந்தவர்களாதலின் இராமமந்திரத்தைத் தலை கீழதாக "மரா" என்று உபதேசித்துச் சென்றனர். மழைபெய்து புற்றுக்கரைந்து உடல்

தோற்றிய காரணத்தால் வான்மீகிக்குப் "பிராசேதஸர்" எனும் பெய ருண்டு. பிரசேதஸ்—வருணன்; அவன் குமாரராதலால் "பிராசேதஸர்." குலம்பிருகு குலமாதலால் "பார்க்கவா" என்கின்ற திருநாமமுண்டு.

இனி வைதவை வின் எய்திய மாக்கதை தமஸா நதிக்கு வான்மீகர் மாத்யாஹ்நிகஸ்நாநம் செய்ய சிஷ்யனாகிய பாரத்துவாச முனிவருடன் சென்று நதிக்கரையில் இரண்டு கிரவுஞ்ச பக்ஷிகள் பிரியாது கூவிக் குலாவிக்கொண் டிருக்கையில் ஒரு வேடன் ஆண்பக்ஷியை வதைத்தான். பெண்பக்ஷி பிரிவாற்றாது இரங்கிக் கூச் சலிட்டது. இதை வான்மீகி முனிவர் பார்த்து கொன்றது மகா அதர்மம் ஆதலால் வேடனைச் சபிக்க வேண்டுமென்று நினைத்த போது மாநிஷாத என்று தொடங்கும் ஒரு சுலோகம் அவர் வாக்கி லுதித்தது. அதன்பொருள் (அடா நிர்ப்பாக்கியனான வேடா) நீ காமவேட்கை கொண்டு களித்திருந்த இரண்டு பக்ஷிகளில் ஒன்றைக் கொன்றதனால் நெடுநாள் வாழ்வற்று துர்க்கதியடையக் கடவாய் என்பதொரு பொருள். திருமகளுக்கிருப்பிடமான பகவானே மண் தோதரியும் இராவணனுமாகிய இரண்டு இராக்ஷஸர்களில் காம மயக்கங்கொண்ட ஒருவனை (இராவணனை) சங்கரித்ததனாலே நெடுங் காலமும் பெருங்கீர்த்தி பெற்று வாழ்வீர் என்பது மற்றொரு புதை பொருள். இது நான்குபாதமமைந்த ஒரு சுலோகமானதைப் பார்த்து ஆநந்தித்து அம்முனிவரிருவரும் களிப்படைந்து தமது ஆச்சிரமஞ் சென்றனர். அங்கு பிரமன் வந்து சுலோகமுதித்தது தமது சங்கற் பத்தால் ஸரஸ்வதி வாக்கிலுதயஞ் செய்தாளென்றும் நாரதரால் கே ட்டுள்ள இராமசரிதத்தை ஓர் பிரபந்தமாகச் செய்யக்கடவீரென்று வான்மீகரை ஆஜ்ஞாபித்து விட்டு மறைந்து சத்தியலோகஞ் சென் றனன். பிறகு வான்மீகர் இராமசரிதத்தைப் பாடி இராமன் அரசு புரிகையில் அவன் குமாரர்களாகிய குசலவர்களுக்குக் கற்பித்து அவர்களைக்கொண்டு பாடுவித்தனர். இச்செய்யுளில் வைதவைவு எய்த எய்தவர் செய்த செய்தவன் எனுந்தொடர் மொழிகளில் பொதிந்து நிற்கும் ஆழ்ந்த கருத்தும் இசைக்கட்டும் சந்தவின்பமும் கம்பனிடத்தமைந்துள்ள கல்வி நலத்தை இனிது விளக்குகின்றன. இவனைக் கவிச்சக்கிரவர்த்தி எனவும் கம்ப நாட்டாழ்வாரெனவும் வழங்குகைக்கு இவ்வவையடக்கச் செய்யுளொன்றேபோதும். சட கோபரந்தாதி பாடிய புலவர் சிகாமணியுமிவரே.

மார்க்கமாயதெவ்வாறெனிலோ கூறுதும். இதனுள் இல்லறத்தார் நடக்கவேண்டிய ஆசாரவிதிகளும், சத்தியத்தின் மேன்மையும், தந்தையினிடம் புத்திரன் நடக்கவேண்டிய முறையும், சகோதரருடைய நிலையும், பதிவிரதத்தின் சிறப்பும், தருமநிலை தவறினோன் எவ்விதத்தும் அழிந்துபோவான் என்பது முதலிய சாமானிய தருமமும், ஸ்ரீராமபிரான் சகல கலியாண குண பூர்ணமான பரதத்துவமென்பதும், அவரைச் சரணமடைவதே சகலாபீஷ்டங்களையும் பெறுமுபாயமென்பதும், அடியார்கள் அநுட்டிக்கவேண்டிய விதிகளின் முறை முதலிய விசேஷ தருமங்களும் செம்பொருளாகவும் புதைபொருளாகவும் காட்டப்பட்டிருக்கின்றன. இதனாற்றான் இது வேத "உபப்பிரம்மணம்" என்னப்பட்டது. உபப்பிரம்மணம் என்றால் பொருளை நன்றாய் விளக்கிக்காட்டுவது என்று பொருள். இப்பொழுது வழங்கி வரும் வான்மீகி இராமாயணத்தில் நூற்றுக்கணக்கான பல சுலோகங்களும் சிலசர்க்கங்களும் அதிகமாக இருக்கின்றன. 600வருஷங்களுக்கு முன் வித்தியாரணியர் செய்துள்ள இராமாயண ரகசியமெனும் நூலிற் கூறும் காயத்திரி பீஜமடங்கிய சுலோகங்களிற் பல இக்காலத்து வழங்கும் காயத்திரி இராமாயணத்துள் காணப்படவில்லை. இன்னும் உருவழியுமுன் சுத்த பாடம் போற்றுமையும் இராமாயணம், பாரதம், பாகவதம், விஷ்ணுபுராணமிவைகளிலுள்ள அபிதானங்களைச் சேர்த்து ஓர் அகராதி செய்யாது விடுத்திருப்பதும் ஆச்சரியமே. கதைச் சார்புரை நம்மவரில் தக்க அகராதிகள் இல்லை. சென்னை வாசிகளாம் வடமொழிப் பண்டிதர்கள் இக்குறையை நீக்கிப் பேருபகாரம் செய்யக்கோருகின்றனன்,

பண்டிதர் தி. வேங்கடராம ஐயங்கார்.

---

## NATURAL HISTORY.

# ஜீவதத்துவ விளக்கம்.

## முன்னுரை.

---

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."—திருக்குறள்

தத்துவநூற் பயிற்சியே மாண்புடைத்தென் றெண்ணி அதனையே மிகவோதும் நம்மவருள், நம்மைச் சுற்றி நாம் தினந் தினங் கண்ணுறுந் தாவர

ஜங்கமப் பொருள்களையும், அவற்றாலுண்டாம் பலாபலன்களையும் தெரிந்து கொள்வதற்குக் காதல் இன்னும் பிறந்ததில்லை. இப்போது மேற்றிசைக் கல்வி எங்கும் பரவ நம்மவருட் சிலர் அத்தகைய நூல்களைப் படிக்க ஆவல் கொண்டு கற்றுவந்தாலும், அவர்களை மற்றவர்கள் கணித மோதுவதாயும், சரித்திரம் படிப்பதாயும் சொல்லி எக்கழுத்தத்தோடு பார்த்து நிந்திப்பது மேலிட்டிருக்கின்றது. இந்த நிந்திப்பு அலைகடல் காணுத் தவளை தானிருந்த கிணற்றையே பெரிதென்னும் பேதைமையை யொக்கும்.

உயிர் நூல் எத்துணை பயனுடைத் தென்பதற்கு இரண்டொரு சான்றே ஈங்குக் காட்டுவோம். காப்பி, தேயிலை, கரும்பு, சோளம் முதலிய தாவரங்கள் சிற்சில சமயங்களில் ஓங்கி வளர்ந்து பலன் கொடாது குன்றிப் போகக் காண்கிறோம். இதற்குக் காரணம் சில பூச்சிகளேயாம். இவற்றை இன்னின்ன வென்று தெரிந்து, தாவரங்கள் நாசமடையாது இருக்கச் செய்பவர் உயிர் நூல் வல்லவரே. விஷச்சுரம் முதலிய வியாதிகள் உண்டாவதும் சில சிறிய ஜீவஜெந்துக்களாலேயாம். அவற்றையுங் கண்டு, அவை நஞ்சரீரத்துட் செல்லாது தடுத்து தேகத்தைப் பாதுகாக்கும் வழியைக் காட்டுபவரும் உயிர் நூல் வல்லவர்களே. இத்தகைய விஷயங்களைப் பற்றி இங்கு எழுத முயன்றதுவும் சில முக்கிய காரணங்களை உத்தேசித்தாம். அவை வருமாறு:—

**முதலாவது**, நமது மேல் அகஸ்மாத்தாய் உட்காருஞ் சிறு கொசுவினது சக்தியை யறியாது தத்துவம் ஓதுவார்க்கும், கணிதம்படிப்பார்க்கும், சரித்திரம் கற்பார்க்கும், எமது நூலும் அவர் நூலைப்போல் பயனுடைத்தென்று காட்டுவதற் கேயாம்.

**இரண்டாவது**, இவ்வித விஷயங்களில் நம்மவர்களுக்கு வெகு நாளாய்ப் பழக்க மில்லாததால் ஜீவஜெந்துக்களைக் குறித்துச் சில அசம்பாவிதக் கதைகளைப் புனைந்து வழங்கி வருகின்றார்கள். அவற்றுட் சிலவற்றை மட்டுமே ஈங்கெடுத்துக் காட்டுவாம். தேளானது முதுகில்வெடித்துக்குஞ்சு பொறிப்ப தென்பதும், பச்சைப்பாம்பு கண்ணைக் குத்துமென்பதும், அரணை நாவால் தீண்டின நிமிஷமே மரணம் என்பதும் உதாரணங்களாம்.

"குளவி வண்டினைத் தன்னினமாக்குமாபோல்"

என்று கல்வியிற் பெரிய கம்பரும் வழுவினாரன்றோ ! இத்தகைய பொய்யை மெய்யென்று நம்பி மயங்குவோர்க்கு இந்நூலால் மயக்க மனைத்தும் ஒழியும் என்பது உறுதி.

# I. LIZARDS. பல்லிகள்.

---

**ஊர்வன:**—(Reptile) ஊர்வனவாகும் ஜெந்துக்கள் யாவும் பல்லி யென்றும், பாமபென்றும், ஆமை யென்றும், முதலையென்றும் பல வகுப்பின. ஈங்கு சில சொல்லுவான் எடுத்துக்கொள்ளப்பட்டது பல்லியென்னும் பிரிவாம்.

நம்மில்லுள் காணும் சிறு பல்லி, மரங்களில் வசிக்கும் ஓணான், மலை நாட்டிலிருக்கும் உடும்பு முதலியன பல்லியென்னும் பொதுப் பெயரின.

சுமார் 1500 விதப் பல்லிகள் உண்டென்பார்கள். பல்லிகள் மிகக் குளிர்ந்த பிரதேசங்களில் அகப்படா. சமசீதோஷ்ணமண்டலத்தில் (Temparate region) அகப்படும் பல்லிகள் மழைகாலத்து ஆகாரமின்றிக் கோடைக்காலம் வரையில் மண்ணிற்குள் வசிப்பனவாம். உஷ்ண மிகுதியுமுள்ள நமது போன்ற நாடுகளில் பல்லிகள் அபரிமிதமாய் உண்டாம்.

பல்லிகள் பலவும் மாம்ச பட்சணிகளே. சிறியவை எறும்பு, ஈ முதலியவற்றையும், பெரியன எலி, சிறு பறவை, மீன், முட்டை முதலியவற்றையும் தின்னும். சில மட்டுமே பூர்வீக பிராமணர்களைப் போல் சாகபட்சணிகளாம்.

பல்லிகள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிப்பன. 2 முதல் 40 வரையில் முட்டைகள் இடும்.

முட்டைகளைப் பறவைபோல் பல்லி பா[illegible] னுடைய வெப்பத்தினாலேயே முட்டையினின்றும் குஞ்சு புறப்படும். இரண்டொருவிதப் பல்லிகள் மாத்திரம் முட்டை யிடாமல் குஞ்சுகளைப் பெறுவனவாம்.

விஷந்தீட்டும் பல்லி ஒன்றுதா னுளது. அதுமிகக் கோரமாயிருக்கும்; மெக்ஸிக்கோ (Mexico) என்னும் அமெரிக்க நாட்டி லகப்படும்.

**சிறு பல்லிகள் Geckos:**—இவை தாம் பல்லிகள் குழாத்தில் மிகச்சிறியவை. இவற்றுள் சில ஒன்றரை இரண்டு அங்குலத்திற்குமேல் வளருவனவல்ல. அவற்றை யாராவது பிடித்தால் வாலைக் (rausom) கொடுத்து விட்டு ஓட்டமாய்த் தப்பி யோடிவிடும். வாலிழந்த பல்லி வாலிழந்த நரியைப் போலாது சீக்கிரத்தில் மற்றொரு வாலை வளர்த்திக்கொள்ளும். சிற்சில சமயங்களில் இரண்டு வாலுண்டாவது முண்டு. அது மிக்க வியப்பை உண்டாக்கும்.

இவற்றின் கால்கள் செங்குத்தான சுவரின்மேல் ஏறக்கூடிய அமைப்புள்ளன. இராக்காலங்களிலேயே சாதாரணமாய் வெளிவரும். விளக்கு வைத்ததும் வேட்டைமேற் புறப்பட்டு, எறும்பு, ஈ இத்தகைய சிறு பூச்சிகளைப் பிடித்

துண்டு சூரியன் கீழ்க்கடல் தோன்றவும் மறையும். குளவி (Wasps) தேள் முதலியவைவிஷத்தால்தீண்டினும்,அதனால்பல்லிக்குக்கேடொன்றுமில்லை.

சில பல்லிகள் பேசுவனவாம். ஆனால் அவற்றின் பேச்செல்லாம் டிக் டிக் என்னும் இரண்டொரு வார்த்தையே. இதனைத்தான் "பல்லிசொல்" என்பார் நமது சோதிடநூலார். இதனைக் கேட்கக் காலையிற் கோவிலுக்குப் போவார் எத்தனைபேர்! இதன் பலாபலன்கள் எத்தனை கோடானுகோடி ஏடுகளில் எழுதப்பட்டுள்ளன. அம்மம்மா சொல்லுந்தரமல்ல! அல்ல!

**ஓணன்**:-Monitors or Bloodsuckers. இவைமரங்களில்காலங்கழிப்பன. இவற்றுள் மிகப் பெரியது 2 அடி நீளம் வளரும். சீதோஷ்ணத்துக்குத் தக்கவாறு மாரிகாலத்தும் கோடைகாலத்தும் தன்நிறத்தை மாற்றும். சிலவற்றைக் கண்டால் மகம்மதியர்கட்கு மிக்க கோபம் பிறக்கும். ஏனெனில், கடவுளைத் தொழுங்கால் மகம்மதியர் தலை யசைப்பது போல், இவைகளும் மரத்தின் மேலிருந்து சில சமயங்களில் தலையை யசைக்கின்றன.

**உடும்பு** Varanus:— பல்லிக் கூட்டத்து மிகப் பெரியனவாம். 6 அடி நீளம் வளரும். இவை ஆபிரிக்கா ஆஸ்திரேலியா இந்தியா இம்மூன்று தேசங்களிலும் மலைப்பாங்கான இடங்களில் அகப்படும். இவற்றை வாலில் கயிறு கட்டி ஏறக்கூடாத சுவரின்மேல் விட்டாலும் அவை சுவரின் உச்சியைக்கவ்விக்கொள்ள, அக்கயிற்றைப் பிடித்துக்கொண்டு மனிதனொருவன் மதில்ஏறமுடியுமென்று நம்மவர்களிடத்தோர் புராதன கதையுண்டு. அக்கதை எத்துணை உண்மையது என்பதற்குத் தக்கசான்று எம்மிடத்திலது. நம்மிடத்து இது போன்ற கதை ஏராளமாயுளவாகையால் அவற்றில் ஒன்றாகக் கொள்வதே ஏற்புடைத்து. உடும்புகளைக் கண்டால் சிங்களருக்கு ஓர் துர்ச்சகுனமாம்.

**அரணை** Skinks:—மிக்க சாதுவான பிராணிகள் இவை. இவை நாவால் தீண்டினால் உடனே மரணமென்று சொல்லுவதின் உண்மை குதிரை முட்டையின்உண்மை போன்றதாம்.கற்களினிடையிலும்உலர்ந்தஇலைகளினிடையிலும்அகப்படும். பண்டைக்காலத்து ஆபிரிக்காவினின்றும் ஐரோப்பாவுக்கு ஓர்வகையரணை மானுடருக்கும் ஆடுமாடுகட்கும் மருந்து செய்வதற்காகஏற்றுமதியாகி வந்ததாம். இப்பொழுதுகூட உடும்பின் தசையைச்சமைத்துக்காசம், வலிப்பு முதலிய நோயால் வருந்துவார் உண்ணக் கண்டிருக்கிறோம்.

**பறக்கும் பல்லி** Iguanasஇவை அமெரிக்காவில் அகப்படும். ஒறுவகை மட்டுமே மலையாளத்திலுண்டு. பறக்குந் திறமுடையது. அதின் உடம்பின் பக்கங்களில் தோல் பக்ஷியின் இறகுபோல் வளர்ந்திருக்கும். அதனுதவியால் ஒரு மரத்தினின்று மற்றொரு மரத்திற்குப் பறந்து போகும். ஆனால் பறவைகள்போல் அழகாகவும் துரிதமாகவும் இப்பல்லிகள் பறக்கமாட்டா.

**பச்சோந்தி Chameleon:**—பல்லிகளிலெல்லாம் அதிசயமானது பச்சோந்தியே. பல விஷயங்ளில் மிக்க அற்புதமானது. மிகுதியும் ஆபிரிகாவிலுண்டு. இரண்டொரு விதம் மட்டும் தென்னிந்தியாவிலும் இலங்கைத்தீவிலும் வசிக்கின்றன. இதன் வாலறுபட்டால் பிறகு வளராது. அடிக்கடி தன்னிறத்தை மாற்றும். இது காரணம் பற்றியே அது கண்ணுக்குச் சீக்கிரம் புலப்படாது. ஒவ்வொருசமயங்களில் மிகவுமொடுங்கி மெலிந்து தானிருக்கும் கொம்போடு கொம்பாய் மறைந்து போம். இன்னுஞ் சில சமயங்களில் காற்றை நிறைய உள்ளிழுத்துச் சுயமாயிருப்பதிலும் நான்கு மடங்கு பெரியதாய் உடம்பைப் பெருக்கிக்கொள்ளும். இதன் கால் விரல்களும் வாலும் மரங்களைக் கெட்டியாய்ப்பிடிக்குந் திறமுடையன. நாக்குமிகநீண்டது. நுனியில்பருத்துள்ளது. 7, 8 அங்குலத்திற் கப்பால் உள்ளபூச்சியை ஒரு வினாடி நேரத்தில் கவரக்கூடியது. அங்ஙனங் கவருவதை நாம் பார்ப்பது அசாத்தியம். இதனிலும் வியக்கக் கூடியது பச்சோந்தியின் கண்களாம். வெகுதூரம் பார்க்கும். அதுவுமன்றி ஒரு கண் அதற்கு நேரில் பார்க்க மற்றொரு கண் அதற்குப் பின்னால் பார்க்குஞ் சத்தியுடையன. அவ்வாறு கண்கள் அமையப் பெற்றுள்ளது. ஆச்சரியம்! ஆச்சரியம்!! நமக்கங்ஙனம் அமைத்திருக்க மாட்டானா வென்று பிரம்மனை வசைகூறுவார் எத்துணை பேர்!

V. N. ஐயங்கார். M. A.

---

## KULASEKARI OR AN IDEAL WOMAN.

# குலசேகரி.

### இது ஓர் நாடகம்.

காப்பு.

உலகெலாமடக்கி உருவெலாம் புகுந்து
கர்வம் பூண்டதோர் அரக்கனை மாய்த்துக்
கற்பை நிலைக்கச்செய்து, ஆருத்துயரந்
தீர்த்து உலகஸம்ரக்ஷணை செய்யும்,
இராகவா! நின் பாதமலரை ஸேவிக்கின்றேன்.

**சூத்திரதாரன்**—(புஷ்பங்களை இறைத்து ஸ்தோத்திரஞ் செய்துவிட்டு) நடீ!

**நடீ**—ஆர்ய! இதோ வந்தேன். (சுற்றிப் பார்த்துவிட்டு) ஆஹா! என்னவிசித்திரமா யிருக்கிறது! ஆகாய ஸ்திரீயானவள் தன் கூந்தலில் அணிந்திரு

கும் புஷ்பங்களாகிற நக்ஷத்திரங்களைப் போலல்லவோ இச்சபையில் உள்ளோர் பிரகாசிக்கிறார்கள்! என்னபரிமளம் வீசுகிறது! இங்கு வந்த பிறகு என்னை யறியாமலே என் மனதிற்கு உல்லாசம் உண்டாகிறது! ஆர்ய! என்னை அழைத்தகாரணம் யாது?

சூத்தி.—இச்சபையில் நம்மையனுக்கிரகிக்கும் பொருட்டு எழுந்தருளி யிருக்கும் பெரியோர்களைப் பார்த்தாயா? அவர்களுடைய மனதை இப்பொழுது சந்தோஷப்படுத்துவது நம்முடைய கடமையாயிற்றே. நற்குல நற்குணமுதலான சகலைசுவரிய சம்பன்னர் சரிதையாலன்றி அவர்கள் மனதைக் களிகூரச் செய்வது அசாத்தியம். நடிக்கும் திறமை யெவ்விதமெனினும் எடுத்துள்ள விஷயமவர்கள்மனதைக் கவரக் கூடியது தானு வென்னு மச்சம் என்னை விட்டதல்ல.

நடி—ஆர்ய! பயத்திற்குக் காரண மென்ன?நாம் நடிக்கப்போகும்சரிதமானது சகலராஜர்களுக்கும் ராஜனாக, சகல திக்குக்களிலும் தன் கீர்த்தியின் வெள்ளொளியால் சத்துருக்களின் வயிற்றில் தீவளரும்படி செய்து அண்டிய நாட்டில் அரசுபுரிந்துவந்த இராமலிங்க ராஜாவின் அருமைப் புதல்வி குலசேகரியின் சரித்திரம் அல்லவோ? அவளது பொருமையும் கருணையும்பார்க்கிறவர்களின்மனதைக் கவருமென்பதற்கும்ஐயமுண்டோ?

சூத்திர—ஆனால் பாத்திரங்களை யனுப்பிவை. துரிதமாக ஆராதிப்போம்.

(திரைக்குப் பின்னர் சப்தம்)

இதென்ன சப்தமுண்டாகிறதே! யாரோ இடையர்கள் வருகிறார்கள் போலும். அவர்கள் வருமுன்னரே நாம்போவோம். (போகிறார்கள்.)

---

## அங்கம். I

### முதலாவது காக்ஷி.

### மதுரையிலோர் காடு;

ஒரு வாலிபனும், கிழவனும் : இடையர்கள். வாலிபன் அழுதுகொண்டு)

கிழவன்:—எண்டா! அழுகிறாய் வீண்லே? சொல்லடா? காரணமென்னடா?

வாலிபன்:—ஐயோ! போச்சே, ஆடு, போச்சே.

கிழவன்:—எங்கடா?

வாலிபன்:—(அழுதுகொண்டே) போச்சே, புலியின் வாயிலே, போச்சே.

கிழவன்:—அழாதே! வருத்தப்பட்டுப் பலனென்ன? (மனதிற்குள் அதிசயமாக வல்லவோ இருக்கிறது எனக்கும் வயசு 35 ஆய்விட்டது இந்த மாதிரி சமாச்சாரம் என்காதில் பட்டதே யில்லை.) ஆட்டையாவது புலியாவது பட்டப்பகலிலேயாவது தூக்கிட்டாவதுபோகவாவது!

**வாலிபன்:**—(அழுது கொண்டு) ஐயோ! ஆடுஒன்னு? ரண்டா? பத்து, பதினஞ்சையும் தூக்கிட்டுபோச்சே. ஒன்னு போனாலும் அப்பன் என்னையும் புல்லிலேகட்டி இழுத்துப்போடுவேன் என்று சொன்னானே (அதிகமாக அழுகிறான்.)

**கிழவன்:**—(யோசுத்து விட்டு) காரணம் தெரிந்துவிட்டது. மகாராஜன் பெரிய ராஜாமகள் குலசேகரியைக் கட்டிக்குடுக்காமலே கண்ணைமூடிட்டானு. அவளைக் கட்டிக்குடுப்பதையே யோசனை பண்ணி ராஜா வேட்டையாடவே யில்லை, காட்டில் துஷ்ட மிருகம் ஜாஸ்தியாய் விட்டது. நம்ம ஆடும் குறைந்து போச்சு.

**வாலிபன்:**—அப்படியானல் ராஜா இப்போ ஆட்டை கொண்டாந்துவிட மாட்டாங்களா?

**கிழவன்:**—அட,போடா, பைத்தியக்காரா, இன்றைக்குத்தான் தங்கச்சியை யாருக்குக் கட்டிக்குடுக்கலாமென்று யோசிக்கக் கூட்டங் கூடுகிறுங்களாம். உன்னையும் என்னையும் உள்ளேகூட விடமாட்டாங்க. ஆட்டைப் பார்க்கலாம் வா (போகிறுர்கள்.)

---

## காக்ஷி இரண்டாவது.

## (வைகை நதிக்கரை.)

### மூன்று பிராமணர்கள்.

---

**1 வது. பிராமணன்:**—எனய்யா, கோபால கிருஷ்ணய்யரே! எல்லாம் சரிதான். காசிராஜனுக்குக் கன்னிகாதானம் செய்வது ரொம்பவும்சிரேஷ்டம்தான். நல்ல புண்ணிய ஸ்தலம்.ராமராமாவென்றாலும்அந்தமாதிரி கிடைக்காது. ராஜ்யமுமோ நல்ல செழிப்பானது; ஐசுவரியம் விரம்பியது. ராஜனும் நல்ல தீரன்தான். ஆனல் ஒன்று:—நம்மதேசம் எங்கேயிருக்கிறது, காசி எங்கேயிருக்கிறது? வருஷத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு தடவை வந்துவிட்டுப் போகலாமென்றால்அடுத்தஊரா? என்னவோ அவ்வளவு உசிதமாகத் தோற்ற வில்லையே.

**2 வது பிராமணன்:**—அதைத்தானய்யா நேற்று நான்சொன்னேன். பெண்ணோசிறுவயதிலேயே பெற்றோர்களை இழந்துவிட்டது. எதற்கும் தமையன் உண்டென்றால் உண்டு இல்லை என்றால் இல்லை என்கிறது; அப்படி யிருக்கும்பொழுது அவ்வளவு தூரத்தில் கொடுப்பது காட்டில் கொண்டுபோய் விடுகிறுப் போல்தா னிருக்கும்.

**3 வதுபிராமணன்:**—நீங்கள்சொல்வது என்னமோபுதியதாகத்தானிருக்கிறது ஆகா, என்ன ஸ்தலம்! என்னஐசுவரியம்! நம்ம தேசத்திற்கு இந்த

சம்பந்தத்தினுலுண்டாகும் பலமென்ன, இப்படிக்கொத்த சாதகங்களையெல்லாம் விட்டு விட்டு யோசனை என்ன? இந்தசம்பந்தம் கிடைத்தால்தான் பூர்வம் ராஜா செய்த தவம் பூர்ணபலிதமாகுமே.

4 வதுபிராமணன்:—இதுவும்ராஜாக்களுடைய துர்ப்பாக்கியமே. நாம் நமது குழந்தைகளை நமதென்று; பாராட்டிஅவரவர்மனதிற்குத்தகுந்தபடி சம்பந்தங்கள் கொள்ளுகிறேமே. ராஜாக்கள் குழந்தைகளும் நம்முடைய குழந்தைகள் போலிருக்கவில்லையா? அவர்களுக்கு ஆசைகிடையாதா? அவர்கள் விதியென்ன? நாட்டுக்குப் புத்திரர்களாக மதிக்கப்பட்டு ஜனங்கள் யோசனைப் பிரகாரம், நாட்டுக்குப் பலமும் சாதகமு முண்டாகிறவிடத்தில் குடிபெடப்படாதோ? (போகிறூர்கள்.)

## காக்ஷி மூன்றுவது.

(மதுரை:—பூந்தோட்டம். குலசேகரியும், சகி தீர்க்காலோசனியும்)

குல:—சகி! ஏது நீ இன்றைய தினம் வாயைத்திறவாமல் என்னை உற்றுப் பார்க்கின்றுய்? ஏதோ விசேஷமிருக்கிறதுபோலும்.

தீர்க்:—இல்லையம்மா, நேற்றிரவு கண்டஸ்வப்பனத்தினுல் என் மனது கொஞ்சம் கலக்க மடைந்தது. வேறென்று மில்லை.

குல:—அதென்ன? சொல்லு பார்ப்போம்.

தீர்க்:—தங்கக்கூட்டை விட்டுப்போன கிளி பாம்பு வாயிற்குப் பயந்து பூனை வாயில் விழுந்தது.

குல:—என்கண்மணி! கூட்டில் பத்திரமா யிருக்கிறதல்லவா?

சகி:—(வருத்தத்துடன்) ஆகா (புஷ்பவதனை புன்சிரிப்புடன் வருகிறுள்)

குல:—என்னபுஷ்பவதனே! உன்வதனத்தில் சந்தோஷந்தோன்று கின்றதே. தீர்க்காலோசனையைப்பார்! வருத்தமுற்ற முகத்துட னிருக்கிறுள். ஆகா! அந்தமரத்தி னருகாமையிலுள்ள கொடியைப் பார்த்தயா? ஆதரவற்று மந்தமாருதத்தில் எவ்வளவு மனேகரமாக நர்த்தனஞ் செய்கிறது! இவ்வளமையில் உச்சி சூரியனது வெப்பத்தை எப்படிச் சகிக்கும். இந்தக்காலத்தில் வளைவதைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக விருக்கின்றதே. பக்கத்திலிருக்கும் விருக்ஷத்தைப் பற்றும்படி அதை நாம் எடுத்துவிடுவோம்வா.

புஷ்ப:—(தீர்க்காலோசனியைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு) அப்படியே செய்வோம். கொடியானது இளமைப் பருவம் முழுதையும் தாண்டவில்லை. புஷ்பிக்கும் சமையம் வந்துவிட்டது. தன்னை

ரக்ஷிக்க ஒருவிருக்ஷத்தைத் தேடாவிட்டால் வீணில் வாடிப்போகும். நான் பிரார்த்திக்கிறதெல்லாம் கூடி ஒவ்வொரு கொடிக்கும் தகுந்த விருக்ஷம் கிடைக்க வேண்டு மென்கிறதுதான்.

குல:—இப்பொழுதென்ன நம்முடைய தோட்டத்தில் போதுமான விருக்ஷங்க ளில்லையா?

புஷ்ப:—இந்தப் பச்சைக்கொடிகளுக்கிருக்கின்றன. ஆனல் ஜீவக் கொடியொன்றிற்குக் கிடைப்பதரிதாக விருக்கிறது.

குல;—அதென்ன, ஜீவக் கொடி யென்றால் புதிதாக விருக்கின்றதே?

புஷ்ப:—உன்னைக் கொடியென்று அழைத்தேன். இந்தக் கொடிக்குக் காசிராஜன்தானே தகுந்த விருக்ஷம்.

குல:—(தலை குனிந்து) என்ன கேலிபேசுகின்றாய். நான் என்னமோசொன்னால் நீ என்னமோ அர்த்தம் பண்ணுகிறாயே?

புஷ்ப:—அம்மா நேற்றையதினம், உனதண்ணன் பூரண அன்புகொண்டு உன்னைக் காசிராஜனுக்குக்கொடுப்பதாகத் தீர்மானித்து நாளைக்குத் தூதனுப்பப் போகிறார். இந்தச் சந்தோஷ விருத்தாந்தத்தை உனக்குத் தெரிவித்தேன். காசிராஜனுடைய கீர்த்தியைப்பற்றி நாம் வேண்டுமளவு கேழ்விப்பட்டிருக்கிறோம். சந்தோஷத்தை யடக்க முயன்றாலும் முடியவில்லை, இந்தக்காரியம் கைகூடுமளவும் ஒரு நிமிஷமும் ஒரு யுகமாகத்தோன்றும், நான்சொல்வதென்ன?

குல:—புஷ்ப வதனே! நாம்அவனைப்பற்றிப் பேசாமலிருப்பது நல்லதென்று உனக்கு தோன்றவில்லையா? வீணில் ஆசையூட்டுகிறதில் பயனென்ன? வயிற்றிற்கு நெருப்பு விலைகொடுத்து வாங்கவேண்டுமா?

புஷ்ப:—அப்படி நினைக்காதே. நீ தேவதையை ஆராதனைசெய்து வருவாயாகில் காரியம் அவசியம் அனுகூலமாக முடியும். பூஜாத்திரவியம் சேகரிக்கப் போவோம் வா. (போகிறார்கள்) (தீர்க்காலோசனி முன் வருகிறாள்.)

தீர்க்கா:—இதுவு மடுக்குமா! குழந்தைமுதல் இவளைக் கீழேவிட மனம்சகியாமல் தாலாட்டிவந்த எனக்கு என் நெஞ்சம் பதைக்கின்றதே. பாதகி சொற் கேட்டதுமுதல், குழந்தைப் பருவத்தில் செய்தவிளையாடல்களெல்லாம் மனதிற்கு முன்வருகின்றன. ஒருசமையம் இவள் தீயின் குண மறியாது கைப்பற்றச்சென்றதும் எனக்கு மறக்குமோ; இப்பொழுதும் அக்குணம் ஒழியாமல் வளர்ந்துவரும் இப்பாவையைத் துக்கத்திலாழ்த்திக் கண்குளிரப்பார்க்க அலங்காரி முயலுகின்றாளே!

எதிர் நின்று கண்மணியைக் காப்பாற்றுவோமென்றால் சக்தியற்றிருக்கிறேனே. பாதகியாளது எண்ணங்கள் முழுமையுமறிவதுதான் சாத்தியமா? சகலரையும்ரக்ஷிக்கும் கடவுளே! என்கண்மணியைக் காப்பாற்றுவீராக. (போகிறாள்.)

---

காக்ஷி நான்காவது.

(மதுரை:—அரண்மனை வேறு இடம்.

அலங்காரியும், தீர்க்காலோசனியும்)

**அலங்:**—சகி! இதோபார்த்தாயா, எனதன்னை எனக்கு ஞாபகார்த்தமாக அனுப்பியிருக்கும் முத்துமாலை. பெருத்து உருண்டு மிகக்காந்தியுடன் கூடியிருக்கும் முத்துக்கள் மனதை எப்படி அபகரிக்கின்றன! ஒவ்வொன்றும் தீமையென்பதறியாத மனமே உருவெடுத்தாற் போலிருக்கிறதல்லவா?

**தீர்க்கா:**—ஆமாம் (மனதிற்குள்) தீமை நிறைந்த மனதிற்குத் தீமையறியாத மனதின் இயல்பு தெரிவது ஆச்சரியமாக விருக்கிறது. சேற்றிலும் தாமரை காணப்படுவதில்லையா?

**அலங்:**—இந்தமாலையை நான் அணிவதைக்காட்டிலும்நீ அணிய நான் பார்த்தால் பதின்மடங்கு சந்தோஷத்தை நான் அடைவேன். இதோ என் வெளி உயிரை நீ தரித்துக் கொண்டிரு. (மாலையை அவள்கழுத்தில் போடுகிறாள்) இதோ அந்தக்கண்ணாடியில் அதனழகைப்பார்.

**தீர்க்.**—மாலை மிகவும் நன்றாகவிருக்கிறது. அதை யணிவதற்கு நானுபாத்திரம்?

**அலங்:**—உனக்கென்ன, இவ்வளவு நேர்த்தியாக விருக்கின்றதே! (முன்னும் பின்னும் பார்த்துவிட்டு) சந்தோஷத்தில் நாம் நல்லதங்கையை மறந்துவிட்டோமே. நான்சொன்னதைச் சொன்னாயா? அவள் மனது எப்படி யிருக்கிறது?

**தீர்க்:**—சரியான பதத்திற்கு வந்து விட்டது. காசிராஜனைப்பற்றி பேச விடேனென்கிறாள்.

**அலங்:**—இந்தமாலை இனி உன்னுடையதே. காலம் வர வரக் காரியங்கள் புருஷர்களுக்குள் நடக்கிறதே ஒழிய வீட்டில் பெரியவர்களைக் கேட்டு ரந்திரங்களை யறிந்து நடைபெறுவதில்லை. இனி தாமதித்தால் புஷ்பவதனை சந்தேகிப்பாள். போகலாம். (போகிறார்கள்) இனிப்பாலில் விழுந்த விஷத்துளிபோல் முற்றிலும் பரவி இச் சிறுசெய்கை மனதைக் கெடுக்குமென்பதில் சந்தேக மில்லை. (போகிறாள்.)

(இன்னும் வரும்.)

---

# ON THE TWELVE NAMES OF THIRUMAL.

# திருமாலின் பன்னிருநாமப்பொருள்விளக்கம்.

## 1-வது நாமம் கேசவன்.

(1) அழகிய கேசத்தையுயைடவன்=கேசவன்.

(2) கேசியெனு மசுரனைக் கொன்றவன்=கேசவன்.

### கேசியின்கதை.

கேசியெனு மசுரன் பிருந்தாவனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தவன். பிருந்தாவனம் என்பதின்பொருள் துளசிவனம், இத்துளசிவனம் மதுராபுரிக்கருகில் யமுனாநதிக்கு மேற்கிலுள்ளது. கிருஷ்ணன் தனது பத்தர்களுக்கு காட்சிதந்து அருள்புரியும் மகாதலமிதுவே. கிருஷ்ணனைக் கொல்லும்பொருட்டுக் கஞ்சனாலேவப்பட்டுக் குதிரை வடிவங்கொண்டு கண்ணன்முன்தோன்றியவன்றான் இக்கேசி. இவனைக்கண்டுபெயந்து ஆய்ச்சியரும் ஆயரும் கண்ணனைச் சரணமடைந்தார்கள். கோவிந்தன் கேசிக்கு எதிரிற்சென்றவுடனே கேசியாம் வாஜி வாயைத்திறந்துகொண்டு கண்ணன் மேற் பாய்ந்தது. கண்ணன்உடனே தனது கரத்தைக் குதிரையின் வாயினுட் புகுத்திப் பெருக்கின உடனே தாக்குண்டு குதிரையின்பற்கள் நகர்ந்து கீழேவிழுந்தன. கண்ணன்கை நீண்டுவளரவே குதிரையின் வலப்புறம் இடப்புற மிரண்டும் இருபிளவாய் விழுந்தன. இதனைக்கண்டு நாரதர் தோத்திரம் செய்தனர். பிறகு கோவிந்தன் ஆயர்கூட்டத்துடன் ஆய்ப்பாடிக்கு எகினன். விஷ்ணுபுராணம் ஐந்தாமம்சம் 16 வது அத்தியாயத்துளிக்கதையைக் காண்க.

(3) பிரம்மனும் ஈசனும் தோன்றிய தேகத்தையுடையவன்=கேசவன். இது பொருள் அரிவம்சத்திலுளது.

(4) பிரம்மன் விஷ்ணு ருத்திரர் இவர்கள் இவரிடத்திலிருப்பதால் கேசவனெனப்பட்ட தெனவும் வேறுபொருள் சிலர் கூறுகின்றார்கள். இவ்வாறாகக் கேசவனெனு மொழிக்கு நான்குபொருள்கள் கூறப்பட்டுள்ளன.

இம்மூர்த்தி செம்பொன்னிறங்கொண்டவர்; நான்கு புஜங்களிலும் நான்கு சக்கிரங்கள்தரித்தவர்; மலைபோன்ற வடிவுடையவர். கிழக்குத்திக்கிலும் நெற்றியிலும் நின்று காப்பவர். சதுச்சக்ரம் எனும்மந்திரமோதிக்கொண்டுஇங்குக்காட்டியபடி திருமாலுருவைத்தியானித்துக்கொண்டு

தபோத்தானமாம் நெற்றியில் மால்சரணகமலம்போல் நாமமிடுவது இராமாநுஜமதத்தாரின் கோட்பாடு. இதன்படியே நாமமிட்டுக்கொண்டு விளங்கும் பாகவதர்கள் தமிழ்நாடெங்குமுளார்.

வேங்கடநாதாசாரியர் பாடிய பன்னிரு நாமப்பாட்டில் முதல்நாமப்பாட்டு:—

கலித்துறை.

கேசவ னுய்நின்று கீழத் திசையிலும் நெற்றியிலும்
தேசுடை யாழிகள் நான்குடன் செம்பசும் பொன்மலைபோல்
வாசி மிகுத்தென்னை மங்காமற் காக்கு மறையதனுல்
ஆசை மிகுத்த அயன்மக வேதியி லற்புதனே——(1)

கீழத்திசையென்பதை பாட்டின்சீரு மிலக்கணமுமறியார் கீழ்த்திசையென்றுச்சரிப்பர். இது பிழை. நேரசையால்துவக்கில் 16 உயிர்மெய்வரல்வேண்டும்; கீழ்த்திசையென்றுல் ஒரு உயிர் குறைவுபடுதல்காண்க. அச்சுதனே எனப்பாடபேதங்கூறி அடியாரை நழுவவிடாதவனென்று பொருள்கொள்வது மொருபடியாம். அயன்மகவேதி பிரமனெடுத்த யாகசாலை. இது காஞ்சி அத்திகிரியிலுள்ளது.

2-வது நாமம் நாராயணன்:—

(1) அவதாரகாலத்தில் நரசரீரத்தைத்தரிப்பவவன்=நாராயணன்.

(2)நாரம்என்னும்ஜலத்தைவசிக்குமிடமாகவுடையவன்=நாராயணன்.

(3) நரசமூகம்நாரமாதலின் அதற்கு இடமாயுள்ளவன் அல்லது நரசமூகத்தைத்தனக்கு இடமாகக்கொண்டவன்=நாராயணன்.

(4)எவனிடத்திலிருந்து சத்தங்கள்பிறக்கின்றதோ அவன்நாராயணன். ரா என்றுல் சத்தங்கள், அயந்தே என்றுல் வெளிப்படுகின்றன என்பதுபொருள்.

ராயணனல்லாதவன்அராயணன். அராயண னல்லாதவன் நாராயணன் அதாவது சத்தத்தாலறியப்படுபவன்.
சத்தமோ வேதசாரமாம்பிரத்வநாதம்.

(5) வேதவியாசர் நரன்என்னுஞ்சொற்கு நற்கதியையடைவிப்பவன், அதாவதுபரமான்மாவின் பெயரெனக்கொண்டார். நரன் என்கின்றபெயரையுடைய பரமான்மாவினுல் ஜலம்சிருஷ்டிக்கப்பட்டதால் நாரமென்கிற பெயரையடைந்தது. நாரத்தில் வசிப்பதினுல் அந்தப்பரமான்மாவுக்கு நாராயணனென்று பெயர். நரன் என்பதன்பொருள் கேடிலாதவன்என்பது.

(6) ஜீவன்கள் பிரளயகாலத்தில் யாரிடத்தில் ஒடுங்குகின்றதோ அவனேநாராயணனென்பதும் மற்றொருபொருள்.

இவ்வாறாக நாராயணன்எனும் மொழிக்கு அறுவகைப்பொருள் காட்டப்பட்டன.

## தேசிகப்பிரபந்தம்.

பன்னிருநாமங்களில் 2. வதுநாமப்பாட்டு:—

### கலித்துறை.

நாரண னுய்நல் வலம்புரி நாலு முகந்தெடுத்துக்
காரணி மேக மெனவே யுதரமு மேற்குநின்று
ஆரண நூல்தந் தருளா லடைக்கலங் கொண்டருளும்
வாரண வெற்பில் மழைமுகில் போல்நின்ற மாயவனே [2]

2. வது புண்டரதேவதையின்நிறம், ஆயுதங்களை இச்செய்யுள் காட்டுகின்றது. நீருண்டமேகம் போல் உதரத்திலும் மேற்குதிக்கிலும் நான்கு சங்கங்களை ஏந்தி நிற்பதாகப்பாவித்து 2-வது புண்டரத்தை வயிற்றிலிட வேண்டுமென்பது நியமம். வாரணவெற்பில் மழைமுகில்போல் நின்றமை கூறப்பட்டிருப்பதால் அர்ச்சாவதாரம் கட்டப்பட்டது. காரணிமேகமென்றதால் வியூகாவதாரம் சுட்டப்பட்டதாகலின் கூறியது கூறலாகாது. இப்புண்டரமிடமந்திரம் சதுச்சங்கதரம் என்று தொடங்குவது. வாரண வெற்பு என்றது காஞ்சியிலுள்ள அத்திகிரியை.

### 3-வது நாமம் மாதவன்.

(1) திருமகளின் கணவன்=மாதவன்.
(மா= திருமகள், தவன்=நாயகன்)

(2) மதுவம்சத்திற்பிறந்தமையால் மாதவன்.
(யதுவின் மூத்தகுமாரன் பெயர் மது ; மதுவின் வழிவந்தார் மாதவர்.)

(3) சத்துருக்களால் கம்பிக்கப்படாதவன் மாதவன்.

(4) மதுவித்தையாலுணர்த்தப்படுபவன் மாதவன்
(32. பிர்மவித்தைகளுள் மதுவித்தையொன்று.)

(5) வேதவியாசர் மவுனதியானயோகங்களாலறியப்படுபவன் மாதவனென்றார்.

இவ்வாறு மாதவனெனு மொழிக்கு ஐந்துபொருள் காட்டப்பட்டன.

தேசிகப்பிரபந்தம் மூன்றுவது நாமப்பாட்டு.

**கலித்துறை.**

மாதவ நாமமும் வான்கதை நான்கு மணிநிறமும்
ஓது முறைப்படி யேந்தி யுரத்திலும் மேலுநல்கி
போதலர் மாதுடன் புந்தியி லன்பாற் புகுந்தளிக்கும்
ஆதனு நாதனு மாகிய தொல்லத் திகிரிச்சுடரே——(3)

மூன்றுவது புண்டரதேவதையின் நிறம் முதலியன இதிற் கூறப்பட்டுளது. மூர்த்தியின் நிறம் இந்திர நீலம். நான்குகரத்தும் நான்கு கதை ஆயுதம். உரமும் மேலும் இடம். மந்திரம் **இந்திரநீல தளசியாமம்** என்று துவக்குவது. மலர்மாதுடன் கூடியிருத்தலும் கொள்க. புந்தியில் இவ்வடிவாய் நின்றளிப்பதாய்த்தியானித்துக்கொண்டு மூன்றுவது புண்டரமிடுகை நியமம்.

( தொடர்ச்சியுண்டு )

பண்டிதர் - தி. வேங்கடராம ஐயங்கார்.

---

# UTTERANCE OF THE DAY.

# நவீனப் பிரசங்கத் திரட்டு.

---

## காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ரானடே.

இது பிரசங்கம் கனம் கோகலே சென்னைக்குஜூலைமீ வந்திருந்தபோது சென்னையிலே செய்தது. "ரானடேக்கு ஞாபகச்சின்னமே வேண்டியதில்லையாலும், பிற்காலத்திலே இந்நாட்டுச் சிறுவர்களுக்குத் தேசாபிமானம் பிறக்கும்படி இந்த ஞாபகச்சின்னம் எழுப்பப்படுகிறது. என்றைக்கும் மறக்க முடியாத தம்முடைய பொதுநலச் செய்கைகளால் மிஸ்டர் ரானடே புகழ்படைத்திருப்பது தெரிந்த விஷயமேயாகும். ரானடே பம்பாய் வாசியாகவிருந்தபோதிலும் அவருக்காக ஒரு ஞாபகச்சின்னம் சென்னையில் அமைக்கப்படுவது என்னைப்போன்ற பம்பாய் வாசிகளுக்கு ஒருவிதப் பெருமையேயாகும். நாங்கள் அதற்காகச்சென்னையாருக்கு நன்றிபாராட்ட வேண்டியவர்கள். ரானடேயைப்பம்பாய் வாசியாக மட்டும் இந்தியர்கள் மதிக்கயாதொரு நியாயமுமில்லை. இந்தியாவிலுள்ள சென்னை, பங்காளம், பஞ்சாப், போன்ற மாகாகணத்தார் அனைவரும் அவரை அந்நிய மாகாணத்தார் என்று மதிக்கமாட்டார்கள். தேசாபிமானம் என்னும் கயிற்றால் கட்டுண்ட எவரும் இவ்விந்திய நாட்டை ஒரு நாடாக மதிப்பார்களேயன்றிப், பல நாடுகளாக மதிக்கமாட்டார்கள். மிஸ்டர் ரானடே பம்பாய் மாகாணவாசிகளின் க்ஷேமலாபங்களை மட்டும் கருதி உழைத்தவர் அல்லர். அவர் ஒரு ஜாதியாருடைய

க்ஷேமலாபத்துக்குமட்டும் உழைத்தவரும் அல்லர். இவ்விந்திய நாட்டு ஜனங்கள் அவ்வளவு பேருடைய நன்மையையும் நாடி உழைத்தவரே யாவர்.

"இந்நாட்டு ஜனங்களுக்குமுதலாவதாக "நாம் அனைவரும் இந்தியர்கள்' என்ற எண்ணமே மேற்படவேண்டும். அவ்வெண்ணம் இந்நாட்டு ஜனங்கள் மனதில் குடிகோள்ள வேண்டும். "நாம் அனைவரும் இந்தியர்கள்" என்ற எண்ணம் குடிகொள்ளுமாயின் தேசாபிமானம் என்பது தானேபிறக்கும். அதனை வாவென்று வருந்தி யழைக்கவேண்டியதில்லை. நாம் அனைவரும் இந்தியர்களே என்ற வெண்ணம் முதன்மை பெறவேண்டும். அப்பால் நாம் ஹிந்துக்கள், நாம் மகமதியர்கள், என்ற அபிமானம் பிறக்கவேுண்டும். "நாம் அனைவரும் இந்தியர்" என்ற எண்ணமே மிஸ்டர் ரானடேயின் மனதில் குடிகொண்டிருந்தது. இந்தியர்களை அந்நிய நாட்டார்கள் மதிக்க வேண்டுமானால், அவர்கள் பொது நலத்துக்கு உற்றசெய்கைகளை மேற்கோளாகக் கொண்டு செய்யும் இயல்பினை மிகுதியும் உடையயர்களாக வேண்டும். இந்தியர்கள் சுயநலம் பாராட்டுபவர்களா யிருக்கும்வரையில் நல்லபதவியை யடையப்போகிறதில்லை. பிரதிப் பிரயோசனத்தைக் கருதி உழைக்கும்வரையில் அவர்கள் நல்ல பதவியையடையப்போகிறதேயில்லை. ஒவ்வொரு இந்தியனும் தன்தன் சக்திக்குத் தக்கபடி பொது நலத்துக் குழைக்கப் பின்வர்ங்கக்கூடாது. யாதொரு பலனையும் எதிர் பாராமல் உழைக்கவும் வேண்டும்.

"இந்தியர்கள் தங்கள் பொறுப்பை இன்னதென்று அறியாதவர்களாயும் அறிந்து கொள்ள ஆத்திரமில்லாதவர்களாயு மிருக்கிறார்கள். மேல்நாட்டு நாகரிகம் தலையெடுத்தாடு மிக்காலத்தில் நம்மவர்கள் இராச்சிய நிருவாக விஷயங்களிலும் நாட்டின் செல்வ நிலையை விருத்திசெய்யக் கூடிய விஷயங்களிலும் அக்கரை செலுத்தி அவைகளில் முதிர்ச்சியுற்ற அறிவைப் பெறப்பாடுபடவேண்டும். அம்மாதிரி அறிவைப் பெறுமளவிருக்கும் வரையில் ஒரு தேசவாசியான ஜனங்கள் செலுத்தக் கடமைப்பட்டிருக்கும் கடமைகளைச் செலுத்த இந்தியர்களால் முடியாதென்பது திண்ணம்."

---

## புத்தக விளம்பரம்.

1. இரசாயனசாஸ்திரம். சிறுவர் சிறுமிகளுக்கேற்றது. விலை அணா 6.
2. சத்தியவிஜயம் அல்லது அரிச்சந்திரன் கதை. நேர்த்தியானது. ,, அணா 4.
3. விக்டோரியா மெய்க்கீர்த்தி. இங்கிலீஷ் தமிழ். ,, அணா 12.
4. தென்னாட்டுச்சிரேட்டர்கள். முதற்பாகம். ,, அணா 12.
5. பன்னிரு பெண்மணிகள். திவ்விய புத்தகம். ,, அணா 6.

வேண்டுவோர் சென்னையிலிருக்கும் மதராஸ் லிடரரிபூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளவும்.

# PERIODICAL LITERATURE.

## பல பத்திரிகா வித்தார மஞ்சரி.

---

## வேமன்ன மகாகவி பத்யங்கள்.

---

(விவேக சிந்தாமணி)

### உலோபிகளால் உலகுக்குப் பயனில்லை.

1. ஈயாதார் மண்ணில் இருந்தென்? இறந்தென்னே?
எயபயன் என்னே? இடரென்னே? ஆயிழையே
புற்றுறையும் புன்கரையான் போந்து பிறந்தென்ன?
மற்றதுதான் மாய்ந்தொழியின் என்?

### தன்னெஞ்சுபோலிருக்கும் பிறர் நெஞ்சமும்.

2. நின்னகத்தே வஞ்சம் நிகழிற் பிறருன்பால்
இன்னலுற வஞ்சம் இழைத்திடுவார்—உன்னகத்தே
வஞ்சனையொன் றில்லையெனின் மாநிலத்தே நிற்கொருவா
வஞ்சனைசெய் யாரே மதி.

### வன்மையும் எளிமையும் அவரவர் இடத்தைப்பற்றி உண்டாகும்.

3. வாரிதியில் ஒடிவரும் வங்கம் கரைப்புக்கால்
ஒரடியும் ஊரா துறைந்திடுமால்—ஆர்வினையின்
வல்லார் வலமெல்லாம் வாய்ந்தவிடத் தேயல்லாற்
செல்லாதாம் வேறு தெரி.

### இதுவுமது.

4. யானையையும் கொல்லும் எளிதே புனன்முதலை
ஏனையிடம் நாய்க்கும் இகல்சாயும்—ஆனதனுல்
மானவலி ஒன்று மதித்திடுநீ யார்யார்க்கும்
தானவலி ஒன்று தனி.

### நன்மக்களால் அடையும்பயன்.

5. ஒண்குணத்தின் நல்லான் ஒருவன் உளனுயின்
வண்குலத்துக் கெல்லாம் வனப்புண்டாம்—தண்பொழிலில்
சந்தனமென் வாசத் தருவொன்றி மிளிரும்
அந்தவனம் எல்லாம் அறி.

### அற்பநும் மேலோநும் இத்தன்மையரேனல்.

6. பூரியர்தாம் என்றும் புகல்வார் இடம்பங்கள்
சீரியரோ யாதொன்றும் செப்பாரே—பேருலகில்
வெண்கலம்போல் ஓசை மிகாதுகாண் செம்பொன்செய்
ஒண்கலத்துக் கென்றே உணர்.

### செல்வமும்வறுமையும் பழவினைக்கீடாக உண்டாகும்.

7. முற்பிறப்பில் நல்ல முயலாதார் செல்வத்துக்
கிப்பிறப்பில் ஆசைப்பா டெய்திடுதல்—பொற்புடனே
விச்சிட்டு வேளாண்மை செய்யான் விளைவுக்கு
நச்சிட்ட வாறெனவே நாடு.

### ஆசையே நாசத்துக்குக் காரணம்.

8. தூண்டிலிரைக் காசித்துத் துள்ளுமீன் ஆருயிர்போய்
மாண்டிடல்போல் மாநிலத்தில் மாந்தர்தாம்—வேண்டரிய
ஆசைப்பேய் பற்றி அலைப்ப அறிவழிந்து
நாசப்பா டெய்துவர்நீ நம்பு.

### பணமுள்ளவனையே வேதமானிப்பார்கள்.

9. கைப்பொருளொன் றுள்ளானைக் காமவே ளென்றுரைப்பார்
அப்பொருள்தான் இல்லா தருந்துயரம்—துய்ப்பானைக்
கன்னற் சிலைவேளே யானாலும் கைத்திடுவார்
இன்னற் புலையோனில் ஈங்கு.

### பதிசொல்லைக்கேளாதவள் பதிவிரதையாகாள்.

10. பதிசொற் கடந்தொழுகும் பாவையாள் அன்னான்
சதியன் றவன்தலையிற் றீட்டும்—விதியாம்
இடம்பயின்று வாழ்தலினும் எண்மடங்கு நன்று
கடும்புலிவாழ் காடென்று காண்.

### வெளிவேடத்தைக்கண்டு உலகத்தார் மதிப்பார்கள்.

11. காதிற் கடுக்கன் கழுத்தில் வடந்தோளின்
மீதுத் தரியம்கை வெற்றிலையும்—ஓதக்கேள்
தக்கபரு மேனியுமுண் டாமேற்சன் மானிப்பர்;
எக்குலமே யாய்விடினும் என்?

### நீசர்குணம் எவ்விதத்தாலும் மாறாது.

12. ஏசறவே கற்றாலும் எத்தனைதான் கேட்டிடினும்
நீசர்குணம் மாறுவரோ ? நேரிழையே!—தேசில்கரி
பால்விட் டலம்புகினும் பல்கால் அதன்கருமை
மேல்விட்டுப் போமோ விளம்பு.

### போராதவேளைக்கு அற்பரும் கெடுதிசெய்ய வல்லவராவார்கள்.

13. அந்நாள் இலங்கை அழிந்தகால் வானரங்கள்
தன்னால் அழிந்ததுகாண் தீன்பெருமை—முன்னிலொரு
கேடாரும் காலைக் கெடுக்க வலியில்லாக்
கூடாரும் போதுமெனக் கொள்.

### கேடுவருமுன்னே மதி கெட்டுவரும்.

14. கானகத்தே காரிகையைக் கைவிட்டுப் பொன்மயமாம்
மானதனைப் பின்தொடர்ந்த வள்ளலினும்—ஞானம்
முதிர்ந்தார் எவருள்ளார்? முன்னம்வரக் கேடு
பதிந்தமதி கெட்டுவரும் பார்.

### அன்போடளிப்பது சிறிதளவேயாயினும் சிறந்ததாம்.

15. ஆவின்பால் முட்டையள வாயிடினும் சீர்மைத்தாம்,
பாவாய்! குடம்கழுதைப் பாலெதற்காம்?—மேவுமுளத்
தன்போடுகை யன்னம் அளித்திடினும் சீர்மைத்தாம்
என்பயனு மிட்ட் பிற?

### நடைப்பிணமாவான் இன்னானெனல்.

16. தேடான், அளித்தறியான், தின்பனவும் தின்னானல்
ஆடையணி கல்லான், அறிவில்லான்—நீடுகலை
ஞானமுமில் லானை நடைபிணமென் றேயுலகில்
மானவர்தாம் வைப்பார் மதி.

### விலைமாதர் மனத்தில் அன்புண்டாகமாட்டாது.

17. விலைமாதர் உள்ளத்தே மேவாதாம் காதல்
அலதொன் றடைந்திடினும் ஆங்கு—விலையாது
பல்லோர்செல் பாதை முளையா முளைத்திடினும்
நில்லாது நீங்கிவிடும் புல்.

**தேகம் அழியுமன்றி ஆன்மா அழியாது.**

18. வானிடத்தே வானடையும் மண்ணிடத்தே மண்ணடையும்
ஊனெடுத்த ஆவி ஒழியுங்கால்—தேனடுத்த
சொல்லாய்நீர் தீவளிதாம் தோயமொடு தீவளியிற்
செல்லும்உயிர் நிற்கும் தனி.

**சத்தியமும் ஞானமுமே மேலோர்க்கு லட்சணம்.**

19. வாய்மையுள்ளார் பாலாய் வளரும் பிறங்கறிவு
தூயவறி வுள்ளார்பாற் றோன்றிடுமே—வாய்மையது
வாய்மையும் சீரார் மனத்தறிவும் உள்ளாரே
ஆய்வுறு மேன்மக்கள் அறி.

---

## விதை பொறுக்கி எடுத்தல்.

---

(வியவசாய தீபிகை.)

“யதாபீஜம் ததாங்குரம்” “தாயைப்போல பிள்ளை” என்பதுபோல விதைக்குத்தகுந்தபடி பயிர்என்னும் அனுபவம் ஒரு பழமொழி ரூபமாக நம்முடைய பெரியோர்களால் நமக்குக் கிடைத்திருந்தபோதிலும் இப்போது பயிரிடும் கிருஷிகர்கள் தங்களுக்குவேண்டிய விதைகளை நன்செய் தோட்டக்கால் புன்செய் நிலங்களில்வளரும் பயிர்களிலிருந்து பொறுக்கிச் சேகரிக்கும் விஷயத்தில் கொஞ்சமேனும் சிரத்தை எடுத்துக்கொள்ளாத விஷயத்தைச் சற்றுயோசிக்குமளவில் எப்படி ஒருகாலத்தில் பற்பல கைத்தொழில்வேலைகளிலும் நெசவுத்தொழிலிலும் சிற்பம் வைத்தியம் ஜோதிடம் முதலாவுள்ள பலவிதசாஸ்திராராய்ச்சியிலும் தேர்ச்சியடைந்து பேர்பெற்று நாகரீக மடைந்திருந்த நம்மவர்கள் காலவித்தியாசத்தால் கைசோரவிட்டதினால் கிருஷ்ணபக்ஷத்துத் தேய்பிறைச்சந்திரன்போல ஒவ்வொரு கைத்தொழிலும் சாஸ்திர அபிவிர்த்தியும் பிரகாசமங்கியிருப்பதுபோலவே கிருஷிசாஸ்திர அனுபவ சம்பந்தமாய் பூர்வீகம் தொட்டு வழங்கிவரும் “அகல உழுவதை ஆழ உழு” “ஆழ உழுது தேடி எரு” “பசுஉரத்திலும் பழம்புழுதி நல்லது” “உரத்தைத்தள்ளும் உழவு” இவைபோன்ற அனேகபழமொழிகளின் உண்மையை அறிந்து அவ்வண்ணம் கிருஷியைநடத்திவாராததினால் கிருஷியின்பெருமையும் அதினால் உண்டாகும் இலாபமும் நாளுக்கு நாள் குறைவுபடுவது பிரத்தியட்சானுபவமாயிருக்கிறது. இவ்

வாறு இனிமேலாவது உண்டாகாவண்ணம் கிருஷியை அபிவிர்த்தி செய்யும்பொருட்டுக் காலதேச வர்த்தமானத்தையும் பூறுவளத்தையும் அனுசரித்துச் சாஸ்திரத்துக்கும் யுத்திக்கும் அனுபவத்துக்கும் சம்மதமாயிருக்கும் பலவிதக்கிருஷித்தொழில்களை ஒவ்வொருகுடியானவனும் தன்னால் இயன்றமட்டும் அப்பியசித்துக் கிருஷியை மேன்படுத்திச் சொற்பச்செலவினால் கூடியமட்டில் அதிக இலாபத்தைப் பெற்றுச் சுகமாயிருக்கவேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது.

நல்லபயிரை விளைவிக்கவேண்டுமானால் நல்லவிதைவேண்டும். வித்துப் பருத்தும், கலப்பற்றதாயும், வியாதிகளால் பீடிக்கப்படாமலுமிருந்தால் எப்பூமியில் விதைத்தாலும் விளையும். நன்றாக உழுது பண்படுத்தி எருவிட்ட பூமியில் விதைத்தால் பயிர்கள் அமோகமாய்ச் செழித்துவளர்ந்து நல்லபலனைத்தரும். கேவலமானபூமியில் விதைத்தாலும் முளையாமல்போகாது. சுவல்மாகுலையாவது கொடுக்கும். வித்து சுருங்கியும் துர்ப்பலமாயுமிருக்கும்பட்சத்தில் நல்ல பூமியில்விதைத்தாலும் நன்றாய் முளையாது. ஒருவாறு முளைத்தாலும் தண்டு பலமில்லாமல் குன்றி உபயோகமில்லாத கதிர்வாங்கி மாகுல் அதிகக் குறைவுபடும். மேலும் பூமியில் உண்டாகும் பலவிதப்பயிர்களுக்கு அனேகவிதமான வியாதிகள் சம்பவிக்கின்றன. இப்படிச் சம்பவிப்பது வித்தின் குணத்தினாலென்று ஒருவாறுசொல்லலாம்.

தற்காலத்தில் குடியானவர்களில் பெரும்பாலோர் தங்களுக்கு வேண்டியபலவித விதைகளைப் பூமியில் பயிர்கள் நிற்கும்போதே பொறுக்கி எடுத்துப் பூச்சி புழு அணுகவொட்டாமல் காப்பாற்றிவைக்கிறதில்லை. விதைப்புக்காலத்தில் தங்களுக்குவேண்டியவிதைகளை சாவகாரியிடத்திலாவது அல்லதுமற்றவர்களிடத்திலாவது அதிகவிலைக்குக் கடன்வாங்கி விதைக்கிறார்கள். இப்படி வாங்கும் விதை கலப்பில்லாமலும் சிரேஷ்டமானதாகவுமிருக்கிறது துர்லபம். எப்படியெனில, உதாரணமாகச் சோளத்தை எடுத்துக்கொள்ளலாம். சோளம் பூமியிலிருக்கும்போது அதற்குசெம்பை, கரிபூட்டை விழுகின்றன. இவைகள்தொத்துவியாதி கண்டவுடன் வியாதியால் பீடிக்கப்பட்ட பயிர்களை வேரோடுபிடுங்கி எறிந்து நெருப்பில் போடுகிறவழக்கமில்லை. ஆகையால்இந்தவியாதிகள் அனேகபயிர்களுக்குப் பரவுகின்றன. வெள்ளாமையும் குறைந்து விடுகின்றன. அறுவடைக்காலத்தில் மொத்தமாக எல்லாக்கதிர்களையும் அறுத்துக் களம்சேர்க்கிறார்கள். மறுநாளிலாவது அல்லது இரண்டொருநாள் கழித்தாவது களத்தில்கொட்டி யிருக்கும் கதிர்கூட்டத்திலிருந்து சிலகதிர்களை விதைக்காக சிற்சில இடங்களில் பொறுக்கி அதைத் தனியாக அடித்துவைத்துக்கொள்ளுகிறார்கள். இப்படிச்செய்வதால் மேற்சொன்னசெம்பை, கரிபூட்டைதொத்து வியாதிகளின் பரமாணுக்கள் மற்றக்கதிர்களின் தானியங்களில் கலக்கப்படுகிறதினால் அடுத்தவருஷத்துப்

பயிர்களில் இந்தவியாதிகள் விசேஷமாய் உண்டாகின்றன. வேறு பலஇடங்களில் மொத்தமாகக் கதிர்களைக்கொய்து களத்தில் உலர்த்தி மாட்டுத்தாம்பினால் அடித்துப் பிறகு தானியத்தைக் காற்றில்தூத்தி முறத்தினால் (சுளகினால்) நன்றாகப்புடைத்துப்பெருத்தமணியுள்ள தானியத்தைவேறாக்கி விதைக்காக உபயோகிக்கிறார்கள். இதிலும் செம்பை, கரிபூட்டைகளின் பரமாணுக்கள்நிரம்பவும் கலக்கின்றன. வேறுபல இடங்களில் களத்தில் கதிர்களை உலர்த்தி மாட்டுத்தாம்பினால் அடிக்கும்போதே கடன் கொடுத்த நாட்டுகோட்டைச் செட்டிமக்களும் மற்றக்கடன்காரர்களும் குடியானவன் கழுத்தின்பேரில் உட்கார்ந்துகொண்டு தாங்கள் குடியானவனிடம் விதைக்காகவும் சர்க்கார் கிஸ்திமற்ற இதரகுடும்பச் செலவுக்கும் நாளாய்விட்டதில் கொஞ்சம் கொஞ்சமாய்க்கடன் கொடுத்து அசலையும் கூடினவட்டியையும் சேர்த்துப்பூமியில் விளைந்தமாகூலை ஈனக்கிரயம்போட்டு எடுத்துக்கொள்ளுகிறார்கள். கடனுக்குப் போய் மிஞ்சினது குடியானவன் காலட்சேபத்துக்குப் போதுமான அளவு மீதுகிறதில்லை. இப்படியிருப்பதினால் விதைபொறுக்கிச்சேகரிக்கும் விஷயத்தில் கொஞ்சமேனும் கவனம்செலுத்துகிறதில்லை. பிரதிவருஷத்திலும் தனக்கு வேண்டிய விதைகளைக் கடையிலாவது அல்லது வேறு இடங்களிலாவது வாங்கவேண்டி வருகிறது. பயிர்களும் புஷ்டியாய் வளராமல் நோவால் அடிபட்டு நல்லமாகூலைக் கொடுக்கிறதில்லை. இப்படிச் செய்யாமல் ஒவ்வொருகுடியானவனும் தன்பூமியிலிருக்கும் மாகூலை அறுவடைசெய்வதற்கு முன் ஒவ்வொரு வருஷத்திலும் தானே நிலத்துக்குள் போய் நோவில்லாமலும் கதிர்பெருத்தும் மணிசெம்மையாய்ப்பிடித்து முற்றின ஒவ்வொருகதிரையும் பரீட்சித்துத் தனக்குவேண்டிய விதைகளைப் பொருக்கி எடுத்துத்தனியாக அடித்துக் காயப்போட்டுப் காப்பாற்றி வைப்பானேயானால் 4 அல்லது 5 வருஷத்துக்குள் வெகு சிரேஷ்டமானதும் அதிகவியப்பத்தைத் தரத்தக்கதுமான சோளவித்தை உண்டுபண்ணுவதுடன் சோளத்துக்கு உண்டாகும் வியாதிகளையும் ஒருவாறு வரவொட்டாமல் தடுக்கக்கூடும். தவிரசோளப்யிர் முன்பின் கதிர்வாங்கி முன்னும் பின்னுமாய்க் கதிர்முற்றி அறுவடைக்கு வரவொட்டாமல் எல்லாப்பயிர்களும் ஏககாலத்தில் கதிர்வாங்கி மாகூலையும் குறைந்த நாளில் அறுவடைசெய்யும் ஸ்திதிக்குக் கொண்டுவரலாம்.

---

# DEPARTMENTAL NOTES.

## பலதுறைக் கலாவிசேடக் குறிப்புகள்.

---

### 1. Agricultural, Industrial and Commercial.

### வியவசாயம், கைத்தொழில், வியாபாரம்.

வெட்டுக்கிளிகள்:—இன்னாட்டில் நெற்பயிரையும் மற்றுமுள்ள பயிர்களையும் சில சமயங்களில் வெட்டுக்கிளிகள் புகுந்து நாசமாக்கி விடுகின்றனவென்பதை எவரும் அறிவார்கள். பம்பாய் மாகாணத்தில் வெட்டுக்கிளிகளின் சல்லியம் அதிகமாயிருப்பதுபற்றி, கவர்ன்மெண்டார் அக்கிளிகள் எச்சமயத்தில் வருஷந்தோறும் அதிகமாகின்றனவென்றும், என்னென்ன விதமாய் அதிகமாகின்றன வென்றும், கண்டுபிடித்திருப்பதாய்த் தெரிகிறது. அஃதெப்படிஎனில்:—எப்ரல், மேமாதங்களில் அவைகள் ஆண் பெண் சேர்வதாகவும், ஜூன் மாதம் முடியும் வரை பெண் வெட்டுக்கிளிகள் முட்டையிட்டு அடைகாப்பதாகவும், ஆறுவார காலத்தில் அடைகாக்கப்பட்ட முட்டைகள் குஞ்சுகளாகி விடுவதாகவும் தெரிகிறது. அடைகாக்கப்படும்போது அவைகள் முதலில் சிறிய கரையான்களைப்போ விருக்கின்றனவாம். அப்புறம் தத்திச்செல்லும் பூச்சிகளாகின்றனவாம். அதற்குப்பிறகு அவைகள் கறுப்பிலிருந்து பச்சையும், பச்சையிலிருத்து சிவப்புமாக நிறமாற ஆரம்பிக்கின்றனவாம். மூன்றுவாரக்காலமாய்விட்டால் அவைகளுக்கு இறகு முளைத்துவிடுகிறதாம். 4-வாரம் ஆய்விட்டால் அவைகள் பறக்கத் தலைப்பட்டுவிடுகின்றனவாம். பம்பாயில் வெட்டுக்கிளிகளைச்சிறு குச்சிகளைச்சேர்த்து விளக்குமாறுகளைப்போல கட்டிக்கொண்டு அவைகளால் அடித்தும் மிதிகட்டைகளைப்போட்டு மிதித்தும் கொல்வது வழக்கம். ஆனால்வேறு ஓர் உபாயத்தால் அவைகளை எளிதாய்ப்பிடித்துக் கொன்றுவிடலாமென்று சொல்லப்படுகின்றது. ஒரு பெரிய வலைப்பையைப் பின்னி அதனுடைய வாயைத்திறந்திருக்கும்படி பக்கத்துக்குஒருவராக இரண்டுபேர் அதனை பிரித்துப்பிடித்துக்கொண்டு அவைகள் எந்தநிலத்துப் பயிரையழிக்கின்றனவோ அந்தநிலத்தின் ஒருபக்கமிருந்து மற்றொருபக்கத்துக்கு ஓடினால் அவ்வளவு வெட்டுக்கிளிகளும் வலையைத்தூக்கிச்செல்லுவோர் ஓடும்வேகத்தால் வலையின் அடிப்பக்கத்தைப்போய்ச் சேர்ந்துவிடுமாம். உடனேவலைப்பையின் வாயைமூடிவிட்டு அதனைச்சுற்றி முறுக்கிக்கொண்டேவந்தால் அதனுட்சிக்கிய வெட்டுக்கிளிகள் அவ்வளவும் அப்பையின்அடிப்பக்கத்தைச்சேர அவைகள் நசுக்குண்டு இறந்து போகுமாம். இம்மாகாண விவசாயிகள் தங்கள் பயிர்நிலங்களை வெட்டுக்கிளிகள் புகுந்

துஅழிக்குமானல் வலைப்பையை வீசி அவைகளைப் பிடித்து நசுக்கிக் கொல்லும் உபாயத்தை அனுசரிக்கலாம்.

**கல்கத்தா சங்கம்:**—சாஸ்திரப்படிப்பின் அபிவிருத்திக்காகவும் தொழிற்படிப்பின் அபிவிருத்திக்காகவும் கல்கட்டாவில் சமீபத்தில் ஒரு சங்கம் ஏற்பட்டிருக்கிறது; இந்தச்சங்கத்தார் வருஷாவருஷம் பெருந்தொகைகள் சேர்த்து, அவைகளைக்கொண்டு ஜப்பான் முதலிய அன்னியதேசங்களுக்கு இந்தியச்சிறுவர்களை யனுப்பியும், அப்படி அனுப்பப்பட்டு அங்கு கல்விகற்றுத் திரும்பி வந்தவர்கள் சும்மா இருக்காமல் ஏதேனும் தொழில் செய்யும்படியாக அவர்களுக்குப் பொருளுதவி செய்தும், வேறு இசைந்த வழிகளெல்லாம் இந்தஉத்தேசம் நிறைவேறுமாறு முயற்சிகள்செய்தும், வரநோக்கங்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கல்கட்டாவிலும் வெளிநகரங்களிலும் பொதுக்கூட்டங்கள் கூட்டித் தங்களுடைய மேலான நோக்கங்களை ஜனங்களறியும்படி செய்துவருகிறார்கள். வருஷம் தலைக்கு 4-அணு கொடுத்தாலும் அப்படிக் கொடுப்போரை இந்தச்சங்கத்தில் சேர்த்துவருகிறார்கள். ஆனல் அவ்வளவு அற்பத்தொகைகளாகச் சேர்த்து மேற்கண்ட பெருங்காரியங்களைச் சாதித்தல் கஷ்டமெனினும், பங்காளதேசத்தில் அனேக ஜமீன்தார்கள் இருக்கிறார்களானதால், அவர்களுடைய சகாயத்தை இந்தச்சங்கத்தார் விசேஷமாகப்பெறுவார்க ளென்று தோன்றுகின்றது. ஏற்கெனவே தர்பங்காமகாராஜாவைப்போன்ற பெரும் ஜமீன்தார்கள் மாசம் 100- ரூபாய் கொடுத்துதவுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறார்கள். அவரைப்போலவேறு சில ஜமீன்தார்களும் வாக்குக் கொடுத்திருக்கிறபடியால், மேற்படி சங்கத்தாரது உத்தேசத்தின் ஒரு பாகமேனும் நிறைவேறக்கூடும். பத்து ஜமீன்தார்கள் மாசம் பத்து 100-ரூபாம் கெடுப்பதாக ஒப்புக்கொண்டு, இரண்டுஅல்லது மூன்று வருஷத்துக்குள்ள தொகையைச் சேர்த்து முன்னதாகக் கொடுத்துவிடுவார்களேயானல், இந்தியச் சிறுவர்களில் பத்துப்பேரை ஜப்பானுக்கனுப்பி அங்கே சாஸ்திரக் கல்வியும் தொழிற்கல்வியும் கற்றுவரும்படிசெய்யலாம். இந்தச்சங்கத்தில் கல்கட்டாவி லுள்ள தனவான்களும் பேர்போன தேசாபிமானிகளும் சேர்ந்திருக்கிறபடியால், ஆரம்ப சூரத்து வங்காட்டிச் சடுதியில் மறைந்துபோகும் பல சங்கங்களில் இதுவுமொன்ருக இராது என்று நம்பலாம்.

**நாமார்? நமது பண்டமேது?** நமது நாட்டிலே தொழிற் கல்வி பரவிய பாடில்லை. இந்து ஜனங்களுக்குவேண்டிய சாமான்கள் இங்கு செய்யப்படுகிறதில்லை. பெரும்பான்மையான ஜனங்களால்வீட்டுவேலைகளுக்காகும் சகல சாமான்களுங் கூட மேல் நாட்டுச் சாமான்களாகவே யிருக்கின்றன. இந்தியர்கள் உபயோகிக்கும்விளக்குகள் ஜர்மனியில் செய்யப்படுவன; விளக்குமேல் வைக்கும் கண்ணடிப் புகைப் போக்கிகள் ஆஸ்டிரியாவின் கைத்தொழில்; விளக்கெரிக்க உபயோகப்படும் எண்ணெய் ருஷியாவிலிருந்து வருவது;

விளக்கேற்றும் தீப்பெட்டிகள் ஸ்வீடனில் செய்யப்பட்டவை; சுவரில் காணப் படும் கடிகாரங்கள் அமெரிக்காவில் உண்டாகின்றன; இந்தியர்கள் கையிற்பிடித்து எழுதும் பென்ஸில் பவேரியாவின் கைப்பாடு; அவர்கள் போட்டிருக்கும் சட்டைத்துணி இங்கிலண்டில் நெய்யப்பட்டது; இந்தியமாதர்கள் ரவிக்கை தைக்க உபயோகிக்கும் ஊசியுங் கத்திரிக்கோலும் இந்தியாவிற் செய்யப்படுபவையல்ல. இவைகளை என் நம்மவர்கள் செய்யக்கூடாது? செய்தால் நாட்டின் ஐசுவரியம் மட்டிலடங்குமா?

Medical வைத்தியம்:—வைத்திய சாஸ்திரப் பிரகாரம் சாதாரணமாக ஒவ்வொருவனுக்கும் அவன் சவுக்கியமாயிருக்க ஒருநாளைக்குக் குறைந்த பட்சம் 5-பையின்டு (100 ஔவுன்ஸ்) அதாவது ஐந்து சீசா ஜலம் வேண்டும். இதில் மூன்றிலொரு பாகம் அதாவது ஏறக்குறைய 2 சீசா ஜலம் அவன் தான் புசிக்கும் ஆகாரத்திலேயே உட்கொள்ளுகின்றான் என்றும் மற்ற மூன்று சீசாஜலம் எப்படியாவது நீராகவோ அல்லது நீர் உருவமாகிய ரசம், மோர், காபி முதலிய ரூபமாகவோ அவன் உட்கொண்டே தீர வேண்டும் என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதல்லாமல் அவன் குளிக்க, பாத்திரங்கள் துலக்க, இன்னும் மற்றக் காரியங்கள்செய்ய இவைகள் எல்லாவற்றிற்கும் ஒருவிதக்கணக்கு ஏற்படுத்திச்சில வைத்திய சாஸ்திரிகள் ஒரு மனிதனுக்குத் தேவையான ஜலம் இவ்வளவென்று பின் வருமாறு குறித்திருக்கின்றார்கள்.

| | | |
|---|---|---|
| சமைக்க | $\frac{3}{4}$ | காலன் |
| அருந்த | $\frac{3}{8}$ | ,, |
| குளிக்க, அனுஷ்டானம்செய்ய | 5 | ,, |
| பாத்திரம், வீடுதுலக்க | 3 | ,, |
| துணிதுலக்க | 3 | ,, |
| சாக்கடை கக்கஸ் இவைகளைக்கழுவ | 12 | ,, |
| மாடு குளிப்பாட்ட | 6 | ,, |
| குதிரை குளிப்பாட்ட | 6 | ,, |

இவ்வாறு குறித்துச் சென்னைபோன்ற ஒரு பெரிய பட்டணத்துக்கு ஜனத்தொகையைக் கணக்கிட்டு சராசரி ஆளுக்கு 30- காலன் ஜலம் ஒரு நாளைக்கு வேண்டியிருக்கலாம் என்று ஒருவிதக் கணக்கை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு ஒருகணக்குண்டாகித் தான் அதன்பிரகாரம் நமது சென்னைமுதலான நகரங்களிற் குழாய்வழியாக நமக்குக் கிடைக்கவேண்டிய ஜலத்துக்கு ஒரு ஜலாசயத்தையும் அதிகாரிகள் உண்டாக்குகின்றார்கள்.

---

## ACKNOWLEDGMENT OF BOOKS.

### புத்தகவரவு.

சத்திய விஜயம்:—(Madras Literary Bureau)
வில்லிபுத்தூரார் பிள்ளைப் பெருமாளையங்கார்:—
(Pandit Vencatarama Iyengar.)

# Works by T. Ramakrishna.

**'Padmini.'**—An Indian Romance with an Introduction by the Right Hon'ble Dr. James Bryce, L.C. L., M. P. 'It is a veritable treasury of Hindu Folklore.' Price per copy Rs. 2-8-0.

**'Tales of Ind'** and other Poems—Rs. 2-8.

Copies can be had from The Secretary—*'Madras Literary Bureau.'*

## "THE TAMILS 1800 YEARS AGO."

**Rs. Five (5) only. Postage Extra.**

1. "The author gives a graphic account of the ancient geography of the land of the Tamils, their early commercial relations with foreign nations, the different peoples who spoke Tamil, the political history of the Tamils, and concludes with a brief vivid description of their social life, mode of warfare, literature, philosophy and religion. The chapter of Tamil poets and their poems displays the erudition of the author, and the extent of his research into the vast field of Tamil literature."—*The Madras Mail* (leader of the 13th May 1904.)

2. "For a book of the kind the materials must be collected from various sources, and when they are collected they have to be so arranged that the lesson to be drawn and the narrative itself may be clear and of no doubtful import. Mr. Kanakasabhai has accomplished all this and he deserves to be congratulated on the success of his labours. He has rendered a public service of no small value."—*The Madras Standard.*

3. "The history of ancient India dealt with in this publication relates to as far back a period as A.D. 50, and covers nearly a century, in regard to which Mr. Kanakasabhai observes that the Sanskrit Literatute is strongly poor, while a considerable portion of the Tamil Literature of that very period has come to us almost intact and reveals to us the condition not only of the Tamils, but also of other races who inhabited the rest of India in that remote age. * * * The book is altogether a unique publication of its kind and is an exhaustive history of a period in Southern India, in regard to which we have scarcely any authentic history, except the historical allusions scattered about in the pages of Tamil Works of antiquity."—*The Madras Times.*

4. "The book will be welcomed as a valuable addition to the Library."—*The Times of Ceylon.*

For copies apply to the Secretary to the 'Madras Literary Bureau,' Umpherson Street, Black Town, Madras.

## TAMIL BOOKS.

1. **'தென்னாட்டுச் சிரேட்டர்கள்'** (முதற்பாகம்—இதிலே ஒன்பதின்மர் ஜீவிய சரித்திரங்கள் அவரவர் திருவுருவப் படங்களுடன் நற்றமிழ் இனிய நடையில் எழுதப் பட்டுள்ளன. விலை அணா 12.

2. **'பன்னிருபெண்மணிகள்'**:—ஷேக்ஸ்பியர் நாடகமாதர்கள் இன்னோராவார் இதிலே பலவகைப்பட்ட பெண்மணிகளின் சரிதைகள் அடங்கியுள்ளன. பெண்பாலார்க்கு மேனாட்டுமாதர்சரிதம் புகட்டுதற் கேற்ற புத்தகம் இதுவே. ஒவ்வொருமாதும் கையில் ஏற்றுப்படித்துப் புத்தகப்பெட்டியிற் பதனப்படுத்தி வைக்கத்தகுந்த சிறந்த புத்தகம் இதுதான். விலை அணா 6.

3. **'விக்டோரியா மெய்க்கீர்த்தி'**:—விக்டோரியா மகாராணியார் மீது பாடப் பட்ட புகழ்மாலை இது. இதிலே அரியபெரிய செய்திகள் பலஅடங்கியுள்ளன. பிரபந்தம் அகவற்பாவால்அமைந்தது; விக்டோரியாவின் ஜனனமும், சரித்திரமும் நல்ல வசனத்தில் எழுதப்பட்டுள்ளன. இங்கிலீஷ் மொழிபெயர்ப்பு சகலத்திற்கும் உண்டு. பம்பாய்ஹைகோர்ட்டு ஜட்ஜி கனம் சந்திரவர்க்கர் இதற்கோர் இங்கிலீஷ் பாயிரம் எழுதியுள்ளார். இதன் விலை அணா 12. புத்தகங்கள் வி. பி. ல். அனுப்பப்படும்.—

முற்குறித்த புத்தகங்களை வேண்டுவோர் மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளலாம்.

IN THE PRESS.

*Will be Ready Immediately.*

A PRIMER OF

# 'TAMIL LITERATURE.'

The first attempt of its kind. It is a critical and historical Survey of Tamil Literature up to date. Price per copy Re. 1. To early Subscribers As. 12 only. Please register your name at the 'Madras Literary Bureau,' Madras.

அச்சிலிருக்கின்றது.

## லலிதா ஸஹஸ்ர நாமம்.

இது பாஸ்கரராயர் மகாபாஷிய சங்கிரகத்தோடு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சேறி வருகின்றது. இது தேவி ஸ்தோத்திரம் ஆதலால் இதிலே தேவியின் ஓராயிர நாமங்களையும் பாஸ்கரராயர் பாஷியத்தோடு தமிழர் படித்து யோக இரகசியத்தையும், புராணகதைகளையும், மந்திர சாஸ்திரபாகங்களையும், மோக்ஷ வழிகளையும் நன்கு அறியலாம். இதன் விலை ரூ 2—0—0. இப்பொழுது பெயரைப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு ரூ 1—8—0. உடனே மதராஸிலிருக்கும் "மதராஸ் லிடரரி பூரோ செக்ரடரிக்கு எழுதிக்கொள்ளவும்.

# NEW BOOKS.

## புத்தம் புதிய புத்தகங்கள்.

## இரசாயண சாஸ்திரம்.

(முதற்புத்தகம்)

விலை அணா ஆறு.

இது புத்தகத்திலே இராசாயண சாஸ்திரநுட்பங்களைப் பற்பல அழகிய படங்களோடு நன்கு விளக்கக்காட்டி இருக்கின்றது. நல்ல பளபளப்பான உயர்ந்த கடிதத்திலே நலமாக அச்சேறியுள்ள புத்தகம். சிறுவர், சிறுமியர், ஆகிய சகலருக்கும் பயன்படக் கூடியது.

## சத்திய விஜயம்.

இது அரிச்சந்திரன் திவ்விய சரித்திரம். நற்றமிழ் இனிய நடையில் எழுதப்படடுள்ளது. சத்தியமே மாந்தர்க்கு உயர்ந்த விரதமென்பதை விளக்கிக்காட்டு மொப்பற்ற திருமுறை இதுதான். விலை அணா 4.

வேண்டுவோர் உடனுக்குடனே எழுதவும். வி. பி. யில் அனுப்பப்படும். தபாற்கூலி வேறு.

செக்ரடரி

மதராஸ் லிடரரிபூரோ,

அம்பர்சன்வீதி, மதராஸ்.